விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 030 வள்ளுவர் ஆண்டு 2055 தை 04 வியாழக்கிழமை (18.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## முன்னாள் எம்.பி துமிந்த சில்வாவுக்கு

# பொது மன்னிப்பு வழங்கியது தவறு

## உயர்நீதிமன்றம் அறிவிப்பு



- துமிந்தவுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு நீதிமன்றால் தள்ளுபடி.
- முன்னாள் ஜனாதிபதி கோட்டாவின் தீர்மானம் தன்னிச்சையானது என நீதிமன்றம் அறிவிப்பு.
- துமிந்தவை கைது செய்ய சட்ட நடவடிக்கை.
- கோட்டாவின் உத்தரவும் நீதிமன்றால் நிராகரிப்பு.

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு நாள் சேவையூடாக

### சாரதி அனுமதிப் பத்திரம்

(கொழும்பு)

தற்போது வழங்கப்பட்டுள்ள தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்துக்குப் பதிலாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் ஒரு நாள் சேவையின் ஊடாக வழமை போன்று சாரதி அனுமதிப் பத்திர 15

## ஒரு இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் 15 நாட்களில் மாத்திரம் இலங்கைக்கு வருகைத் தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை ஒரு 15



## நாட்டின் நலனுக்காகவே துமிந்தவுக்கு பொதுமன்னிப்பாம்

### விளக்கமளித்த கோட்டாபய

(கொழும்பு)

நாட்டின் நலனை கருத்திற் கொண்டே துமிந்த சில்வாவிற்கு பொதுமன்னிப்பை வழங்கியதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சத்தியக் கடதாசியில் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சத்தியக் கடதாசி 15

### இலங்கைச் சரித்திரத்திலேயே முதல் தடவையாக

## ஜனாதிபதியின் பொது மன்னிப்பு செல்லுபடியற்றது என தீர்ப்பு



(கொழும்பு)

இலங்கைச் சரித்திரத்திலே முதல் தடவையாக ஜனாதிபதி ஒருவருடைய மன்னிப்பு செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 16

### யாழில் இன்று முதல்

## விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இன்று முதல் விசேட டெங்கு ஒழிப்பு வேலை திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித் 15

## 14 தமிழ் அரசியல் கைதிகளே இன்னும் சிறையில் உள்ளனர்



### நீதி அமைச்சர் விஜயதாஸ

(வவுனியா)

14 தமிழ் அரசியல் கைதிகளே இன்னும் சிறையில் உள்ளனர் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 15

## என்னைக் கொல்ல நினைத்த சிங்கள இளைஞன் மனம் மாறினார்



### விக்னேஸ்வரன் எம்.பி சொன்ன கதை

(யாழ்ப்பாணம்)

என்னைக் கொலை செய்ய கொலை வெறியில் இருந்த சிங்கள இளைஞன் தன் தவறை உணர்ந்து மனம் மாறி 16

## மன்னாரில் வீதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னாரில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் உயிலங்குளம் மன்னாரைச் சேர்ந்த யாக்கோப்பு சூசை 15

## நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிக்கு

### ஐ.எம்.எப் பாராட்டு



(டாவோஸ்)

நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர்ஜீவா பாராட்டு தெரிவித்துள்ளார். 02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முல்லைத்தீவு கிளை

## கூறுவிலை கோரல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய வெள்ள அனர்த்தத்தால் மாசடைந்த கிணறுகளை நீரிறைத்து உட்புறம் வெளிப்புறம் சுத்தம் செய்து குளோரின் இடல் செயற்பாட்டிற்கான கேள்வி கோரல்.

கேள்வி கோரலுக்கான விண்ணப்பப் படிவத்தினை இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு மாவட்ட கிளையில் எதிர்வரும் 23.01.2024 வரைக்கும் வாரநாட்களில் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை ரூபா 1000 (ஆயிரம்) இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். (கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது)

தங்களுடைய கூறுவிலை படிவத்தினை பூர்த்தி செய்து மூடிய கடித உறையிட்டு (கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குறிப்பு எண்: SLRCS/B19/PRO/2024/01" குறிப்பிடப்பட வேண்டும்) 26.01.2024 அன்று மாலை 4.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

**Branch Executive Officer,**
**Sri Lanka Red Cross Society,**
Mankulam Road,
Mullaitivu Town, Mullaitivu.

(C-8155)

## பொது மன்னிப்பு...

துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கியது தவறு என உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை இடம்பெற்ற நிலையில் இறுதி தீர்ப்பு நேற்று வெளியிடப்பட்டிருந்தது அதில்,

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கிய முன்னாள் ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்சவின் தீர்மானம் தன்னிச்சையானது என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. அத்துடன், குறித்த தீர்மானம் சட்டத்திற்கு புறம்பானது எனவும் தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி, அரசியலமைப்பு விதிகளை பின்பற்றாது துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்பை இரத்து செய்யுமாறு உயர் நீதிமன்ற நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய குழாம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், துமிந்த சில்வா தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் துமிந்த சில்வா உள்ளிட்ட மேலும் நால்வருக்கு 2016 ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இருப்பினும், 2019 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் 2021 ஆம் ஆண்டு துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

இந்த பொது மன்னிப்பின் சட்டபூர்வ தன்மையை கேள்விக்குட்படுத்தி மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

ஹிருணிகா பிரேமச்சந்திர, அவரது தாயார் சுமனா பிரேமச்சந்திர மற்றும் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் கஸாலி ஹுசைன் ஆகியோரினால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. (ம-7)


**லங்கா மஹால்(PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1900/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2290/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (18665)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

Western Union, MoneyGram, Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
077 8393 974


## நாட்டின்...

சுவிஸ்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடிய போது இந்த பாராட்டை தெரிவித்ததாக கிறிஸ்டலீனா ஜோர்ஜீவா தமது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பில் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் முதல் மீளாய்வுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று குழு அனுமதி அளித்ததன் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்துள்ளார். (ம-7)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 24 - 05 - 1951



மறைவு 29 - 01 - 2023

### அமரர் சறோஜினிதேவி புஷ்பநாதன்
(பங்காளர் துர்க்கா பொத்தகச்சோலை - சுன்னாகம்)

நேற்று எங்கள் அன்னையாய்
இன்று எம் அருளினியாய்
என்றும் எமது இறைவியாய்
வாழும் எமது அன்பு தெய்வத்தை
நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

19.01.2024 அன்று எமது இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நிகழும் எங்கள் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

"தேவி வாசா"
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

(C-8156)

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 - 06 - 1948



மறைவு 17 - 01 - 2024

### பத்மலோஜினி சண்முகநாதன்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மலோஜினி சண்முகநாதன் அவர்கள் நேற்று 17.01.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குமாரசாமி சண்முகநாதன்(ஓய்வுநிலை மேல்நீதிமன்ற பதிவாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வல்லிபுரம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசாமி - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பத்மநாதன் அவர்களின் அன்புச் சகோதரியும் மற்றும் செல்வலட்சுமி(UK), தங்கரத்தினம், பாலசுந்தரம்(கனடா), காலஞ்சென்றவர்களான குலசிங்கம், சிவஇன்பநாயகி மற்றும் சிவசுப்பிரமணியம்(கனடா) ஆகியோரின் மைத்துனியும் தர்ஷிகா(தொழிற்துறை திணைக்களம், யாழ்ப்பாணம்), கௌசிகன்(மாவட்ட நீதிமன்றம், கொழும்பு), துளஷிகன் (மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை), நிரோசிகன்(பேரவைச் செயலகம், வட மாகாணசபை) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரதீபன்(யாழ்.இந்துக் கல்லூரி), நிருஜா(தொழில் நியாயசபை, யாழ்ப்பாணம்), சியாமளா (தொழிற்துறை திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிஷயன், ஷயானி, பிரகீத், பிரணிகா, யாதிரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.01.2024 வியாழக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொடர்பு :
021 221 4393

தகவல் :
குடும்பத்தினர்

(18666)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்குள் மீண்டும் நுழையும் இந்திய இராணுவம் - பகீர் தகவல்

(திருமலை)

**திருகோணமலை மாவட்டம் இந்தியாவின் பிரகடனப் படுத்தப்படாத ஒரு மாநிலமாக மாறி உள்ளது. அதற்கு அண்மையில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு மற்றும் பொங்கல் நிகழ்வுகளை எடுத்துக்காட்டாக குறிப் பிடலாம் என்று பிரித்தானிய இராணுவ ஆய்வாளர் கலாநிதி அருஸ் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட அவர் திருகோணமலையை கட்டுப் படுத்துவதன் மூலம் இந்தியா வடக்கையும் கொழும்பையும் தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முயல்கிறது.

மாலைதீவு விவகாரத்தில் சீனா தனது வலுவான இடத்தைக் கைப்பற்றி உள்ளமை இந்தியாவிற்கு பெரும் பின்னடைவாக அமைந் துள்ளது.

எனவே அதற்கு பதிலாக இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட இந்தியா முயல்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார். (நி-5-6)

## பெப்ரவரி 5 ஆம் திகதி பாடசாலை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் பெப்ரவரி 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இரத்து செய்யப்பட்ட க.பொ.த உயர்தர விவசாய பாட நெறியின் இரண்டாம் பிரிவு வினாத்தாளை எதிர்வரும் முதலாம் திகதி நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அடுத்த தவணைக்காக பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த வினாத் தாளை கடந்த 10ஆம் திகதி மாணவர்களுக்கு வழங்க கல்வி அமைச்சு திட்டமிட்டிருந்தது. எனினும் பரீட்சைக்கு முன்னதாக சமூக வலைத்தளங்களில் விவசாய பாடப் பிரிவு வினாத்தாள் வெளியாகி இருந்தமையால் சர்ச்சை ஏற்பட்டது. இந்நிலையில், குறித்த பாடநெறிக்கான பரீட்சையை இரத்துச் செய்வதாக பரீட்சைகள் திணைக் களம் அறிவித்திருந்தது.

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டத்தை பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்க கல்வி அமைச்சு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## தீர்வு வழங்காவிடின் தொழிற்சங்க நடவடிக்கை

### அதிபர்கள் சேவைச்சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

புதிய சேவை யாப்பு காரணமாக அதிபர்களும் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக அதிபர்கள் சேவை சங்கம் தெரிவித்துள்ளது. இந்த வாரம் கூடும் அமைச்சரவை கூட்டத்தில் இப்பிரச்சினைக்கு தீர்வை வழங்காவிடின் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட நேரிடும் என சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சிசிர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பதவி உயர்வு மற்றும் சம்பளத்தை இழந்தவர்கள் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான அவதானத்தை செலுத்துமாறு கல்வி அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளோம்.

அமைச்சரவை பத்திரம் மூலம் இதற்கு தீர்வு காண்பதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர். அடுத்த வாரம் புதன்கிழமை அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என அண்மையில் நாம் நடத்திய கலந்துரையாடலில் அமைச்சர் உறுதியளித்தார். இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படும் என நம்புகிறோம்.

இல்லை என்றால் அனைத்து அதிபர்களையும் கூட்டி தீவிர நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளோம் என்றார். (நி-5-6)

# ஜெனிவா சவால்களை முறியடிப்பதில் தீவிரம் காட்டும் இலங்கை

(கொழும்பு)

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் சவால்களை எதிர்கொள் வதற்காக இலங்கை புதிய இராஜதந் திர முயற்சிகளை முன்னெடுத்துள் ளது.

ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் உட்பட பல நாடுகளின் தலைவர் களுடன் பேச்சுவார்த்தைகளை மேற் கொள்வதன் மூலம் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் எதிர்வ ரும் அமர்வில் எழக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கான புதிய அணுகு முறைகளை இலங்கை பின்பற்ற ஆரம் பித்துள்ளது.

அணிசேரா மாநாட்டிற்காக ஜனா திபதி ரணில்விக்கிரமசிங்க உகன்டா செல்லவுள்ளார். இந்த மாநாட்டினை பயன்படுத்தி ஆபிரிக்க தலைவர்கள் உட் பட பல தலைவர்களுடன் பேச்சுவார்த் தைகளை மேற்கொள்ளவுள்ள ஜனாதி பதி ஐக்கிய நாடுகள்மனித உரிமை பேர வையில் ஒத்துழைப்பு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயவுள்ளார்.

இலங்கை தொடர்பான தீர்மானத் தினை முன்வைக்கும் நாடுகளில் பிரதா னமான பிரிட்டனுடன் இலங்கை, ஜெனிவா அமர்வு குறித்து பேச்சுவார் த்தைகளை மேற்கொள்ளவுள்ளன என விடய மறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர் களிற்கு எதிரான நடவடிக்கைகளிற்கு கப்பல்களை அனுப்புவதற்கு அமெரிக் காவும் பிரிட்டனும் விடுத்த வேண்டு கோள்களை இலங்கை ஏற்றுக்கொண் டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள விடய மறிந்த வட்டாரங்கள் ஜெனிவா அமர் விற்கு முன்னர் இந்த நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற் காகவே ஜனாதிபதி கப்பலை அனுப்ப இணங்கினார்.

மார்ச் மாத அமர்வில் இலங்கை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஆராயவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தித்துளிகள்

### மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்றைய தினம் வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 71.95 அமெரிக்க டொலராக வீழ்ச் சியை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 78.29 அமெரிக்க டொலராக நிலவு கிறது.

இதேவேளை உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.84 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது. (நி-5-6)

### மீண்டும் திறக்கப்பட்டது யால தேசிய பூங்கா

(கொழும்பு)

வெள்ளம் சூழ்ந்த நிலையில் மூடப்பட்ட யால தேசிய பூங்காவின் சுமார் 75 வீதமான பகுதிகள் நேற்று முன்தினம் மீண்டும் திறக்கப்பட்டன.

தற்போது மழையுடனான கால நிலை குறைவடைந்த காரணத்தால் யால பூங்காவின் இரண்டு பிரதான நுழைவாயில்கள் உட்பட அனைத்து வீதிகளும் யால பூங்காவிலுள்ள அனைத்து சுற்றுலா விடுதிகளும் சுற்றுலா பயணிகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டன. (நி-5-6)

### தீவிரமடையும் "யுக்திய"

**மேலும் 1024 பேர் கைது**



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த சில வாரங்களாக பொலிஸாரினால் முன் னெடுக்கப்பட்டு வரும் "யுக்திய" நடவ டிக்கையின் போது நாளாந்தம் ஆயி ரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு வருவதுடன் போதைப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் பல்வேறு போதைப் பொருள் குற்றங்களுடன் தொடர்பு டைய 699 சந்தேகநபர்கள் மற்றும் குற்றவியல் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட குற்றவாளிகள் பட்டியலில் இருந்த 325 சந்தேக நபர்கள் என மொத்தம் 1024 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை குறித்த சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது ஹெரோயின் 227 கிராம், ஐஸ் 168 கிராம், கஞ்சா 8 கிலோ 40 கிராம், கஞ்சா செடிகள் 13,892 , 227 கிராம், மதனா மோடகா 24 கிராம், 647 மாத்திரைகள் என்பன கைப் பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (நி-5-6)

# விளையாட்டுச் செய்திகள்

## இலங்கைக்கு பதிலடி கொடுத்தது சிம்பாவே அணி



இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு -20 போட்டியில் 4 விக்கெட்டுகளினால் வெற்றிபெற்று சிம்பாவே அணி தொடரை 1-1 என சமன் செய்துள்ளது.இலங்கை அணியை இருபது-20 போட்டியில் சிம்பாவே அணி வீழ்த்துவது இதுவே முதன்முறையாகும்.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாவே அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்த நிலையில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது.

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்களான பத்தும் நிஸ்ஸங்க் குஷால் பெரேரா, குஷால் மெண்டீசு மற்றும் சதீர சமரவிக்ரம ஆகியோர் ஆட்டமிழக்க இலங்கை அணி 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

பின்னர் ஜோடி சேந்த மத்தியூஸ் மற்றும் அசலங்க நிதானமாக துடுப்பெடுத்தாட இலங்கை அணி 8.4 ஓவர்களில் 50 ஓட்டங்களை கடந்தது.

சிறப்பாக விளையாடிய சரித் அசலங்க 31 பந்துகளில் 50 ஓட்டங்களை குவித்தார். மறுமுனையில் மத்தியூஸ் 23 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க இலங்கை அணி 15 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து 101 ஓட்டங்களை குவித்தது.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களை குவித்தது. இதனை தொடர்ந்து 174 ஓட்டங்களை எடுத்தால் என்ற வெற்றி இலக்கோடு சிம்பாவே அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது.

10 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டினை மாத்திரமே இழந்து சிம்பாவே அணி 75 ஓட்டங்களை குவித்தது. சிறப்பாக விளையாடிய ஏர்வின் அரைசதம் அடித்து அசத்தினார்.

பின்னர் 96 ஓட்டங்களை சிம்பாவே அணி பெற்றிருந்த போது பென்னட் ஆட்டமிழக்க தொடர்ந்து வந்த சிக்கந்தர் ராசா 8 ஓட்டங்களோடு ஆட்டமிழந்து வெளியேறினார். இதனை தொடர்ந்து சீன்வில்லியம் ஒரு ஓட்டத்தோடும் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ஏர்வின் 70 ஓட்டங்களோடும் ஆட்டமிழந்து வெளியேறினார். இருப்பினும் இறுதி ஓவரில் 19 ஓட்டங்கள் தேவை என்ற போது சிம்பாவே அணி வீரர் லாங்கே சிறப்பாக ஆடி சிம்பாவே அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றார். (நி-5-6)

## பிபாவின் சிறந்த வீரருக்கான விருதை வென்ற மெஸ்ஸி



பிபாவின் சிறந்த வீரர் என்ற விருதினை தட்டிச் சென்றார் மெஸ்ஸி. லண்டனில் 2023 ஆம்ஆண்டுக்கான பிபாவின் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு விருதுகள் வழங்கும்விழா நடந்தது.

இதில் சிறந்த வீரர் விருதை பெறுபவர் யார் என்பதில் மெஸ்ஸிக்கும் எர்லிங் ஹா லண்ட்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

இருவருமே 48 புள்ளிகள் பெற்றிருந்தனர். ஆனால், அதிக தேசிய அணியின் கட்டன்கள் மெஸ்ஸிக்கு வாக்களித்ததால் அவர் விருதினைத் தட்டிச் சென்றார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் அவர் மூன்றாவது முறையாக இந்த விருதை பெற்றுள்ளார். சிறந்த அணியின் மேலாளர் விருதை மான்செஸ்டர் சிட்டியின் பெப்கார்டியோலா வென்றார்.

சிறந்த கோல் கீப்பர் விருதை மான்செஸ்டர் சிட்டியின் எடர்சன் வென்றார். சிறந்த வீராங்கனை விருதை ஸ்பானிஷின் அயிட்டனா பொன்மதி வென்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3019

**சுகன்யா**

நிருபர்- பால் வியாபாரம் செய்து
குறுகிய காலத்தில பெரிய லட்சாதி பதியாயிட்டீங்க.
உங்க தொழில்
ரகசியம் என்ன சேர்?
முருகேசு- நாலே நாலு பொயின்ட் தான் சேர்.
1.மாட்டுக்கு நல்ல பச்சைப்புல்லு கொடுக்கனும் சேர்.
2.அப்புறம் விடியக் காலையிலேயே
பாலைக் கறந்திடனும்.
3. பாலிலே நாலுக்கு ஒரு பங்கு தண்ணீர் ஊற்றிக்
கலாம்.
4. இதெல்லாத்தையும் விட பாலைக் கறக்கும்போது
மாட்டுக்கு சொந்தக்காரங்க கண்ணிலே அகப்பட்டு
விடக்கூடாது.

**லேனுகா**

பொன்னுங்க கிட்ட நீ கோவமா
இருக்கியான்னு கேட்டா மூனு
பதில் தான் வரும்😂
✧ ஆமா (அப்படினா ஆமா)
✧ இல்ல (அப்படினாலும் ஆமா)
✧ தெரியல (கண்டிப்பா ஆமா)



**கஸ்தூரி**




**விமல்**




**தாருசன்**




**யாகேஷ்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## சாவகச்சேரி பிரதேசசபை

## சபைநிதி வேலைத்திட்டங்கள்-2024

1. சாவகச்சேரி பிரதேசசபை சார்பாக உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோரு கின்றார்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3. ஒப்பந்ததாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி / கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule -5) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதிசேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவை கோர முடியும்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர் சாவகச்சேரி பிரதேச சபை, A9 வீதி கொடிகாமம் (தொலைபேசி : 021 205 0348, 021 205 0356 தொலைநகல் : 021-2050348) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2024.01.18 தொடக்கம் 2024.02.08 வரையான காலப் பகுதியில் வேலைநாட்களில் காலை 09:00 மணி முதல் 14:00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், பெறுகைக் குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 2024.01.18 ஆம் திகதியிலிருந்து 2024.02.08 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் மாலை 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரிக்கு 2024.02.09 ஆம் திகதி மாலை 02:00 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் 02:30 மணிக்கு திறக்கப்படும்.

9. கீழ் காட்டப்படும் கேள்விகள், கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து NP/14/41/(6)/2/C.F/2024/01 இலக்க வேலைக்கு **77** நாட்கள் **(2024.04.26)** மற்றைய வேலைகளுக்கு **63** நாட்கள் **(2024.04.12)** வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

11. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2024.01.26 ஆம் திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

| தொடர் இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41/(6)/2/C.F/2024/01 | ஒட்டாங்கேணி மயான வீதி மீள்நிர்மாணம் | 8.70 | 90 | C7 & C6 (வீதி நிர்மாணம்) | 87,000.00 | 2024.05.24 |
| 2 | NP/14/41/(6)/2/C.F/2024/02,03,04,05 | தடுப்பணை நிர்மாணம், உடையார் குள வீதி, மந்துவில<br>ஆழ்வார்மட வீதி புனர்நிர்மாணம், வரணி<br>வண்ணான்துறை வீதி புனர்நிர்மாணம், மந்துவில்<br>கோணாவளை வீதி புனர்நிர்மாணம், மந்துவில்மேற்கு , மந்துவில் | 3.49 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 35,000.00 | 2024.05.10 |
| 3 | NP/14/41/(6)/2/C.F/2024/06,07,08,09 | தடுப்பணை நிர்மாணம், கரன் வீதி, தாவளை இயற்றாலை<br>ஐயனார் கோவில் வீதி மீள் நிர்மாணம்<br>வீரசிங்கம் பாடசாலை வீதி மீள் நிர்மாணம், மீசாலை வடக்கு<br>மணல் வீதி 2ம் குறுக்கு வீதி மீள் நிர்மாணம், மட்டுவில் மத்தி | 4.23 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 43,000.00 | 2024.05.10 |
| 4 | NP/14/41/(6)/2/C.F/2024/10,11,12,13 | செட்டிக்கேணி வீதி நிர்மாணம், எழுதுமட்டுவாழ் கட்டம் 1<br>காயன்கடவை 4வது குறுக்குவீதி நிர்மாணம், எழுதுமட்டுவாழ்,கட்டம் 1<br>காயன்கடவை சேராவில் வயற்கரை வீதி நிர்மாணம், எழுதுமட்டுவாழ், கட்டம் 1<br>கஜகேணி பிள்ளையார் வீதி நிர்மாணம், உசன், கட்டம் 1 | 2.47 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 25,000.00 | 2024.05.10 |
| 5 | NP/14/41/(6)/2/C.F/2024/14,15,16 | 5 வீட்டுத்திட்ட வீதி மீள்நிர்மாணம்<br>வெண்ணையன்கட்டு வீரபத்திரர் கோவில் பின் வீதி மீள் நிர்மாணம்<br>ஊரியான் 2வது வீதி மீள்நிர்மாணம், கைதடி மேற்கு | 2.35 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 24,000.00 | 2024.05.10 |

விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக்கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறுவரிகள்) 50 மில்லியனுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(III) மற்றும் பின்னூட்டல் இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும். அத்துடன் இக்கேள்வியின்போது 09.10.2020 மற்றும் 11.01.2021 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020 மற்றும் 03/2020(I) என்பனவும் பின்பற்றப்படும்.

(சி-8152)

**தலைவர்,உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை.** 2024.01.18

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்த தீவகத்தில் பொலிஸ் நிலையம் நிறுவ வேண்டும்



(சாவகச்சேரி)

தீவகத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த மேலும் ஒரு பொலிஸ் நிலையத்தை நிறுவ வேண்டிய தேவைப்பாடு இருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

கைதடியில் நீதி அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய நல்லிணக்கத்திற்கான கலந்துரையாடலின் போது வேலணைப் பிரதேசத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுவதாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியிருந்த நிலையிலேயே கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அரசாங்க அதிபர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் கால்நடைத் திருட்டு மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வு ஆகியன பல பிரதேசங்களிலும் இடம்பெற்று வருவது தொடர்பில் ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தின் போது இதனை சுட்டிக் காட்டியிருந்தோம்.

யாழ்.மாவட்டத்தில் தீவு முழுவதற்கும் ஊர்காவற்றுறையில் ஒரு பொலிஸ் நிலையம் மாத்திரமே உள்ளது. அந்த பொலிஸ் நிலையமே மண்டைதீவு வரை முகாமை செய்கிறது.

தீவகத்தில் பொலிஸ் பலம் போதாமல் இருப்பதே சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரிக்க காரணம். தீவகத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேலணை அல்லது அல்லைப்பிட்டி பகுதியில் மேலும் ஒரு பொலிஸ் நிலையம் நிறுவ வேண்டும் என மேலும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.(நி-5-6-30)

# இளம் குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்பு

## தனங்கிளப்பில் துயரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் உள்ள கிணறொன்றில் இருந்து நேற்றுமுன் தினம் பிற்பகல் 33 வயதான இளம் குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருமணமாகி நுணாவில் பகுதியில் வசித்து வரும் மேற்படி பெண் குறித்த தினத்தில் தனது குழந்தையுடன் தனங்கிளப்பு பகுதியில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்று குழந்தையை ஒப்படைத்து விட்டு துவிச்சக்கரவண்டியில் சென்றதாகவும் நீண்ட நேரமாகியும் பெண்ணை காணாத நிலையில் உறவினர்கள் இணைந்து தேடுதல் நடத்திய போது தனங்கிளப்பு பகுதியில் உள்ள கிணறு ஒன்றிற்கு அருகில் அவர் பயணித்த துவிச்சக்கர வண்டி காணப்பட்ட நிலையில் அவரும் கிணற்றுக்குள் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-30)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் விஞ்ஞானமாணிப் பட்டம் பொது/சிறப்பு பட்ட 2024/2025 கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மார்கழி 10ஆம் திகதிக்கு முன் இணையவழி ஊடாக (WWW.OU.ac.lk) விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்க முடியும். மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்துடன் 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என யாழ் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கே.கந்தவேள் அறிவித்துள்ளார். (நி-5-6)



யாழ்-STS கண் மருத்துவமனையும் Green layer நீர் வேலி அமைப்பும் இணைந்து கடந்த திங்கட்கிழமை (15) ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 250 குடும்பங்களுக்கு தலா 2 தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (நி-5-6)

# யாழ்.பல்கலையில் ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாநாட்டின் அழைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.எஸ்.ரமணன் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து 3ஆவது ஆண்டாக நடைபெறும் இம் மாநாட்டில் கலைப்பீடத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதாயக் கற்கைகள் சார்ந்த 136 ஆய்வுக்கட்டுரைகள் பட்டப்படிப்பை நிறைவு செய்து வெளியேறும் மாணவர்களால் சமர்ப்பிக்கப்... (நி-5-6-33)



புலோலி பால் சங்க அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பட்டிப்பொங்கல் நிகழ்வு. (படம்: மகாலிங்கம்)



திருநெல்வேலி சந்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பட்டிப் பொங்கல். (படம்: சிவசாந்தன்)



வவுனியா குட்செட்வீதி கருமாரி அம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பட்டிப்பொங்கலும் கோமாதா வழிபாடும். (படம்: வசந்தரூபன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 700 | 700 | 900 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1000 | 900 | 1000 |
| தக்காளி | 460 | 600 | 650 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 140 | 140 | 150 |
| கோவா | 800 | 700 | 800 | 900 |
| கரட் | 1500 | 1800 | 2000 | 2400 |
| பூசணி | 150 | 120 | 120 | 200 |
| புடோல் | 350 | 250 | 200 | 300 |
| வாழைக்காய் | 200 | 240 | 160 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 450 | 450 | 430 | 450 |
| பாகற்காய் | 800 | 1000 | 600 | 1200 |
| வெண்டக்காய் | 400 | 400 | 160 | 500 |
| கருணைக் கிழங்கு | 150 | 120 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 550 | 600 | 600 |
| லீக்ஸ் | 450 | 650 | 720 | 800 |
| பீற்றூட் | 800 | 600 | 1000 | 800 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | 2400 | 3000 |
| போஞ்சி | 600 | 700 | 600 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 700 | 600 | 500 | 800 |
| கீரை - 1 பிடி | 160 | 160 | 150 | 200 |
| தேசிக்காய் | 250 | 350 | 120 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 90-110 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 700 | 450 | 600 |
| வெங்காயப்பூ | 650 | 700 | 850 | 1000 |
| முள்ளங்கி | 200 | 250 | 220 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 35 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

உணவகமொன்றிற்கு உதவியாளர் தேவை
வயது எல்லை 18-30
**தொடர்புகளுக்கு**
**077 629 0894**
(8661)


# சில பொருட்களின் விலையை குறைக்க சதொச தீர்மானம்



(கொழும்பு)

வற் வரி அதிகரிக்கப்பட்ட போதிலும் சில பொருட்களின் விலையை அதிகரிக்காமல் விற்பனை செய்ய சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, சவர்க்காரம், வாசனை திரவியங்கள், முகப்பூச்சு மற்றும் சிறு குழந்தைகளுக்கு தேவையான பொருட்கள் ஆகியவற்றை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

வற் வரியானது பதினெட்டு சதவீதமாக அதிகரித்தமையால் சந்தையில் சில பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## மாநகர சபை எல்லைக்குள் வாழும் பொதுமக்களுக்கான விசேட அறிவித்தல்

- மாநகரசபைக்குட்பட்ட அனைத்து வரியிறுப்பாளர்களும் தங்களது திண்மக்கழிவுகளைத் தரம் பிரித்தே கையளித்தல் வேண்டும்.
- மாநகரசபை கட்டளைச்சட்டங்கள், சுற்று நிருபங்களின் கீழ் சமையலறைக் கழிவுகள் மாத்திரமே மாநகரசபையால் இலவசமாக அகற்றப்படும். ஏனைய தரம் பிரிக்கப்பட்ட கழிவுகள் அவற்றின் அளவுகளின் அடிப்படையில் கட்டணத்துடனேயே அகற்றப்படும்.
- தரம்பிரிக்கப்பட்ட கழிவுகளை பொதுமக்கள் காக்கைதீவு மீள்சுழற்சி மையம், கல்லுண்டாய் திண்ம கழிவு சேகரிப்பு நிலையம் மற்றும் 09 பிரட்டு மையங்களிலும் (நல்லூர், அரியாலை, பாஷையூர், குருநகர்I, குருநகர்II, பசார், நாவாந்துறை, வண்ணார்பண்ணை, கொழும்புத்துறை) கையளிக்க முடியும்.
- தரம் பிரித்து வழங்கப்படாத கழிவுகள் எக்காரணங்கள் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- நீரோடும் வெள்ளவாய்க்கால்களில் கழிவுப் பொருட்கள் மற்றும் குப்பைகளைப் போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது.
- கழிவுகளை வீதிகளிலும் பொது இடங்களிலும் வெற்றுக்காணிகளிலும் முறையற்ற விதத்தில் வீசுவது தடை செய்யப்பட்டுள்ளதுடன் வீசுவோர் மீது தண்ட அறவீடும் எமது உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுச்சூழல் பொலிஸார் ஊடாக சட்ட நடவடிக்கையும் மாநகரசபையால் எடுக்கப்படும்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.** (சி-8151)

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் சபைக்குச் சொந்தமான கடைகளை நீண்டகால குத்தகை, குறுங்கால வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை நீண்டகால குத்தகை, குறுங்கால வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நல்லூர் பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 17.01.2024ஆம் திகதி தொடக்கம் 26.01.2024 ஆம் திகதி பி.ப 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 26.01.2024ஆம் திகதி பி.ப 2.30 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 26.01.2024ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம்,நல்லூர் பிரதேச சபை.

நீண்டகால குத்தகை

| தொ. இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் மீன்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்மாடிக் கடை இல 1/1 | 6,000.00 | 1,440,000.00 | 15,000.00 | 2,000.00 |
| 02 | கொக்குவில் மீன்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்மாடி கடை இல 2/1 | 7,000.00 | 1,680,000.00 | 17,000.00 | 2,000.00 |

குறுங்கால வாடகை (ஒரு வருடம்)

| தொ. இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் தபால் அலுவலகத்தின் மேல்தளத்தில் அமைக்கப்பட்ட கடைத்தொகுதி | 17,000.00 | 204,000.00 | 10,000.00 | 2,000.00 |

கேள்வி தொடர்பான நிபந்தனைகள், மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேசசபை.** (சி-8149)

## சாவகச்சேரி பிரதேச சபை

### தனியார் சுத்திகரிப்பு சேவை, பாதுகாப்பு சேவை, சாரதி சேவை பெற்றுக் கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2024

1. சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய கேள்விதாரர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களுக்கு **சுத்திகரிப்பு சேவை, பாதுகாப்பு சேவை மற்றும் சாரதி சேவையினைப்** பெற்றுக் கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   - **கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி - 2024.01.18 வியாழக்கிழமை - 2024.02.01 வியாழக்கிழமை பிற்பகல் 02.30 மணி வரை**
   - **கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி - 2024.02.02 பி.ப 10.00 மணிவரை**
   - **கேள்வி திறக்கும் திகதி - 2024.02.02 பி.ப 10.30 மணி**
2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட திருப்திகரமான சேவையினை வழங்கியவராகவும் வலிதான வியாபார பதிவினை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் கேள்வி கோரப்படும் சந்தர்ப்பத்தில் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
4. கேள்விதாரின் பதிவுக்காரியாலயம் அல்லது கிளை அலுவலகம் வட மாகாணத்தில் அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.
5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கைக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் எனும் முகவரியிலுள்ள தலைமை அலுவலகத்தில் **மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 2.30 மணி** வரை மீளளிக்க முடியாத கேள்வி படிவக் கட்டணமாக **ரூபா 2,000.00** இனை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. அத்துடன் மீளளிக்ககூடிய வைப்புப்பணமாக **ரூபா 10,000.00** இனைப் பணமாகச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று பிரதியினை கேள்வி கோரல் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியினை **செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் எழுதி அனுப்புதல் வேண்டும். இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
8. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
9. சாவகச்சேரி பிரதேச சபையின் பெறுகைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கமைவாக எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அமைய தற்போது ஒதுக்கப்பட்ட ஆளணிகளின் எண்ணிக்கையினை அதிகரிக்கவோ குறைக்கவோ நிராகரிக்கவோ முடியும்.
10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | சேவை விபரம் | சேவை தேவைப்படும் இடம் | பால் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | சுகாதார தொழிலாளி (வேலை மேற்பார்வையாளர்) | சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் | ஆண் | 1 | ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலம் |
| | (சாதாரணம்) | | ஆண்/பெண் | 18 | |
| 2 | சாரதி | | ஆண் | 2 | |
| 3 | பாதுகாப்பு சேவையாளர் | | ஆண் | 5 | |

**க. சந்திரகுமார்,**
**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேச சபை.** (சி-8150) **18.01.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# அயோத்தி ராமர் கோவிலுக்கு 108 அடி நீள ஊதுபத்தி



(டில்லி)
இந்தியா - அயோத்தியில் உள்ள ராமர் கோயிலில் நடை பெறும் கும்பாபிஷேக நிகழ்வில் பயன்படுத்துவதற்காக விசேட மாக 108 அடி நீள ஊதுபத்தி தயாரிக்க ப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலம் வதோ தராவில் தயாரிக்கப்பட்ட இந்த ஊதுபத்தி 3,610 கிலோ எடை யும் 108 அடி நீளமும் மூன்றரை அடி அகலமும் கொண்டது.

இந்த ஊதுபத்தி பற்ற வைத் தால் 50 கிலோமீற்றர் தூரத் திற்கு வாசனை பரவும் என் றும் ஒன்றரை மாதங்க ளுக்கு தொடர்ந்து எரிந்து வாச னையை அளிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அயோத்தி ராமர் கோயி லில் ஜனவரி 22 ஆம் திகதி காலை கும்பாபிஷேக நிகழ்வு நடைபெற உள்ளது.

இதற்காக பிரத்தியே கமாக தயாரிக்கப்பட்ட ஊது பத்தி பயன் படுத்தப்பட உள் ளது.

இந்நிலையில் ஊதுபத் தியை வதோதராவில் இரு ந்து அயோத்திக்கு கொண்டு செல வதற்காக பிரம்மாண்ட பார வூர்தி வடிவமைக்கப்பட்டு அதில் ஏற்றப்பட்டுள்ளது. (நி-5-6)

# பாகிஸ்தான் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்

## இரு குழந்தைகள் பலி

(இஸ்லாமபாத்)
"ஈரான் அரசு கடுமை யான விளைவுகளை சந்திக்க நேரிடும்" என பாகிஸ்தான் அரசு எச்சரிக்கை விடுத்துள் ளது. பாகிஸ்தானைக் குறி வைத்து பாலோசிஸ்தான் பகுதியில் ஈரான் அரசு நடத் திய ஏவுகணைத் தாக்குத லில் இருவர் உயிரிழந் துள்ள நிலையிலேயே பாகிஸ்தான் அரசு இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தா னின் வெளியுறவு அமைச் சர் வெளியிட்டுள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது, "ஈரான் பாகிஸ்தான் மீது மேற்கொண்ட தாக்கு தலை வன்மையாகக் கண் டிக்கிறோம்.

இது எங்கள் வான்வெளி யில் நடத்தப்பட்ட அத்துமீறல். இத்தாக்குதலினால் அப்பா விக் குழந்தைகள் இருவர் உயிரிழந்துள்ளனர். அத்து டன் சிறுமிகள் சிலரும் காய மடைந்துள்ளனர். இத்தாக் குதல் தொடர்பில் ஈரான் அரசு கடுமையான விளை வுகளை எதிர்கொள்ள நேரி டும்" என தெரிவிக்கப்பட் டுள்ளது. (நி-5-6)

# தாய்வான் விடயத்தி...

# பிலிப்பைன்ஸ்...

(பீஜிங்)
தாய்வான் ஜனாதிபதித் தேர்த...
பெற்ற லாய் சிங்கிற்கு பிலிப்பைன்...
வாழ்த்து தெரிவித்திருந்த நிலைய...
விவகாரத்தில் விளையாட வேண்...
பைன்ஸை சீனா எச்சரித்துள்ளது...




# உலகளாவிய ரீதியில் புகையிலைப் பயன்பாடு வீழ்ச்சி

## உலக சுகாதார ஸ்தாபனம்



(ஜெனிவா)
உலகளாவிய ரீதியில் புகை யிலை பயன்பாடு வீழ்ச்சியடைந் துள்ளதாக உலக சுகாதார ஸ்தா பனம் தெரிவித்துள்ளது.

2000 ஆம் ஆண்டு மூன்றில் ஒருவர் புகைப்பிடிப்பவராக இருந்த நிலையில் தற்போது குறித்த தொகையானது ஐந்தில் ஒருவராக குறைவடைந்துள்ளதாக குறிப் பிடப்பட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் புகை யிலை கட்டுப்பாட்டில் குறிப் பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் மனநிறைவு அடையும் வகை யில் இல்லை என உலக சுகாதார ஸ்தாபனத்தின் சுகாதார மேம்பாட்டுத் துறை யின் பணிப்பாளர் ரூடி கேர் க்ரேஷ் தெரிவித்துள் ளார்.

அத்துடன் புகையிலைத் தொழில் எண்ணற்ற உயிர் களை பலிகொடுத்து இலா பத்தை ஈட்டுவதனை கண்டு தாம் வியப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டில் 1.36 பில்லியனாக இருந்த 15 வயதுக்கு மேற் பட்ட வயதுடைய பாவனை யாளர்கள் தற்போது 1.25 பில்லியனாக குறைவடைந் துள்ளது என தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதன்படி 2030 ஆம் ஆண்டில் உலக சனத் தொகை அதிகரிக்கப்படு கின்ற போதிலும் புகை யிலை பயன்படுத்துவோர் தொகை 1.2 பில்லியனாக குறைவடையும் என ஆய் வுகள் குறிப்பிட்டுள்ளன.

தென்கிழக்கு ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுக ளில் புகைப்பிடிப்போர் அதிகம் காணப்படுவதாகவும் சனத் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் புகைத்தல் பழக் கம் கொண்டவர்கள் என வும் தெரிவித்துள்ளது.

இதன்படி எகிப்து, ஜோர் தான் மற்றும் இந்தோனே சியா உள்ளிட்ட சில நாடுக ளில் புகையிலை பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருவ தாகவும் உலகளாவிய ரீதி யில் சுமார் 362 மில்லியன் பேர் புகையிலை பொருட் களை பயன்படுத்துவதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# ஹமாஸுக்கு...
# பட்ஜெட் ஒ...



(ஜெருசலேம்)
ஹமாஸ்க்கு எதிரான ... காக இஸ்ரேலியப் பெறு... கமைய பட்ஜெட்டில் ஒரு... 24 ஆயிரம் கோடி ரூபாய்... ஒதுக்கும் சட்டத்திருத்த... இஸ்ரேல் அமைச்சரவை... தல் அளித்துள்ளது.

ஹமாஸ்க்கு எதிரான ... நூறு நாட்களை கடந்த... நிலையில், பட்ஜெட்டில் கூடு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...த்தில் விளையாட வேண்டாம்
# ...க்கு சீனா எச்சரிக்கை

...ர்தலில் வெற்றி
...பன்ஸ் ஜனாதிபதி
...லையில் தாய்வான்
...ண்டாம் என பிலிப்
...ளது.



தாய்வான் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றவருக்கு பிலிப்பைன்ஸ் வாழ்த்து கூறியதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தாய்வான் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற லாய் சிங்கிற்கு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி வாழ்த்து கூறியதை தொடர்ந்து பிலிப்பைன்ஸ் தூதருக்கு நேற்று முன்தினம் சீன வெளியுறவு அமைச்சகம் நோட்டீஸ் அனுப்பியது.

சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் செய்தியாளர்களிடம் பேசியதாவது,

“சீனா உடனான அரசியல் உறுதிமொழிகளை பிலிப்பைன்ஸ் மீறியுள்ளது. மேலும் சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டுள்ளது.

தாய்வான் விவகாரத்தில் விளையாட வேண்டாம் என்று பிலிப்பைன்ஸிடம் தெரிவித்துக் கொள்கிறோம்.

தாய்வான் பிரிவினைவாதிகளுக்கு தவறான சமிக்ஞைகள் அனுப்புவதை பிலிப்பைன்ஸ் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும் இந்த விவகாரம் குறித்து முறையான விளக்கம் அளிக்க வேண்டும் என்று கூறி பிலிப்பைன்ஸ் தூதருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக கடந்த திங்கட்கிழமை தாய்வானுடன் இருதரப்பு உறவை பலப்படுத்த விரும்புவதாகக் கூறி லாய் சிங்கிற்கு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸ் ஜூனியர் சமூக வலைத்தளத்தில் வாழ்த்து தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## நைஜீரியாவில்
# படகு கவிழ்ந்ததில் 100 பேர் மாயம்



(அபுஜா)

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் ஆற்றுக்குள் படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் சுமார் 100 பேர் மாயமாகி உள்ளதாக கூறப்படும் நிலையில் விபத்துப் பகுதியில் இருந்து 8 உடல் கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நைஜீரியா போந்து பகுதியிலிருந்து கெப்பி மாகாணத்திலுள்ள சந்தைப் பகுதியை நோக்கி நைஜர் ஆற்றின் வழியாக அந்தப் படகு கட ந்த திங்கட்கிழமை சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. அளவுக்கு அதிகமான ஆட்களையும்சுமைகளையும் ஏற்றிச் சென்றதால் அந்தப் படகு கவிழ்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் காணாமல் போனோரை தேடும்பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (நி-5-6)

# அதிகரித்த பனிமூட்டத்தால் 30 விமானங்கள் ரத்து

(டில்லி)

டில்லியில் அதிகரித்திருக்கும் பனிமூட்டம் காரணமாக 30இற்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் புகையிரதங்கள் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவின் வட மாநிலங்களில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக மக்கள் பெரும் சிக்கலுக்குள்ளாகியுள்ளனர். டில்லியில்காலை வேளையில் 3.6 டிகிரிக்கும் குறைவான வெப்பநிலையே பதிவாகுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கடுமையான பனிமற்றும் குளிர் காரணமாக வட மாநிலங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ...க்கு எதிரான போருக்கு
# ... ஒதுக்கிய இஸ்ரேல்



...திரான போருக்
...ப் பெறுமதிக்
... ஒரு லட்சத்து
...2 ரூபாய் நிதி
...திருத்தத்திற்கு
... சரவை ஒப்பு

...திரான போர்
... கடந்துள்ள
...ல் கூடுதலாக

நிதி ஒதுக்குவதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

இதுகுறித்து, அமைச்சரவையில் 24 மணி நேரத்திற்கும் மேலாக விவாதம் நடைபெற்றது.

இறுதியில், நடப்பு ஆண்டு போருக்காக மட்டும் 15 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்குவதற்கான சட்டத் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# உருகும் பனிப்பாறையில் உருவாகும் அழகிய வடிவங்கள்





நாளாந்தம் சிறிதாக உருகும் ஏ23ஏ பனிப்பாறையில் மிக பெரிய வளைவுகளும் குகைகளும் இயற்கையாக உருவாகியுள்ளன.

முழுவதும் பனியால் சூழப்பட்ட, பனிப்பாறைகள் நிறைந்த அழகான கண்டமாக அந்தாட்டிக்கா காணப்படுகின்றது.

இங்கு மனிதர்கள் வசிப்பது முடியாததால், ஆராய்ச்சியாளர்களும் சுற்றுலா பயணிகளும் மட்டுமே சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இங்குள்ள பனிப்பாறைகளில் மிகப்பெரியது, ஏ23ஏ. இந்த பனிப்பாறை 1986களிலேயே அப்பிரதேசத்தின் கடல் பகுதியிலிருந்து உடைந்து நகர்ந்து செல்ல தொடங்கியது.

சுமார் 30 ஆண்டுகளாக வெட்டல் கடல் பகுதியின் ஆழத்தில் சிக்கி அங்கேயே நிலை நிறுத்தப்பட்டிருந்த ஏ23ஏ பனிப்பாறை, சுமார் 4 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்டுள்ளது.

அங்கு உள்ள பனி நீர் சுழற்சியால் தென் ஆர்க்னி தீவை நோக்கி இது மெதுவாக பயணிக்க தொடங்கியுள்ளது.

பனிப்பாறையின் நகர்வை டிரோன் கமரா மூலம் படம் பிடித்த நிபுணர் குழு ஒன்று அப்புகைப் படங்களை வெளியிட்டுள்ளது.

எப்பொழுது என உறுதியிட்டு கூற முடியாவிட்டாலும் சில ஆண்டுகளில் ஏ23ஏ முழுவதும் உருகி விடும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் இரத்த அழுத்தத்தால் உயிரிழப்போர் அதிகரிப்பு

## விசேட வைத்திய நிபுணர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கையில் முதியவர்களில் நான்கில் ஒருவர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் பேராதனை போதனா வைத்தியசாலையின் நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் உதயரல பனாவ தெரிவித்துள்ளார்.**

தெற்காசிய நாடுகளின் நடுத்தர வயதுடையவர்களிடமே இந்த நிலைமையை அதிகம் இனங்காண முடியும்.

இலங்கையில் கொவிட் அனர்த்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து நாட்டில் நிலவும் பொருளாதார மந்தநிலை போன்ற சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளும் இந்த நிலைக்கு காரணமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர் இரத்த அழுத்தம் அறிகுறிகளை வெளிப்படுத்தாததால் அமைதியான மரணம் ஏற்படுகிறது.

இந்த நிலைமை மோசமாகும்போது மிகவும் அரிதாக



கடுமையான தலைவலி மற்றும் தலைச்சுற்றல் ஏற்படலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் பலர் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும் மக்களிடையே உள்ள உயர் இரத்த அழுத்தமும் ஒரு காரணம் எனவும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

"உயர் இரத்த அழுத்தம் பெரும்பாலும் மரணம் வரை கண்டறியப்படாமல் போகும். ஏனெனில் அது அறிகுறிகளைக் காட்டாது. இந்த நிலை கட்டுப்படுத்தப்படாவிட்டால், அது பல சிக்கல்களுக்கு வழி வகுக்கும்.

பக்கவாதம், சிறுநீரக செயலிழப்பு, மாரடைப்பு போன்ற நிலைகள் அவற்றில் முக்கியமானவையாகும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# பொங்குதமிழ் பிரகடனத்தின் 23 ஆம் ஆண்டு நிகழ்வுகள்



(யாழ்ப்பாணம்)

பொங்குதமிழ் மக்கள் பேரெழுச்சி பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு எழுச்சி நாள் நிகழ்வுகள் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பொங்குதமிழ் தூபியிலேயே நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பொங்குதமிழ் பிரகடனத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகளான சுய நிர்ணய உரிமை, மரபு வழித் தாயகம், தமிழ் தேசியம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

# வீட்டுப் பணியாளர்களுக்கான ஆட்சேர்ப்புக் கட்டணம் குறைப்பு

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து வீட்டுப்பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும்போது அறவிடப்படும் கட்டணத்தை குறைப்பதற்கு சவூதி அரேபியா தீர்மானித்துள்ளது.

பிலிப்பைன்ஸ், இலங்கை, பங்களாதேஷ், உகண்டா, கென்யா மற்றும் எத்தியோப்பியா உள்ளிட்ட நாடுகளில் இருந்த பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நிறுவனங்களுக்கு இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபிய மனித வளங்கள் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சினால் இந்த கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து வீட்டு பணியாளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்யும்போது அறவிடப்படும் கட்டணத்தை [illegible] ஆயிரம் சவூதிஅரேபிய ரியாலில் இருந்து 13 ஆயிரம் சவூதி அரேபிய ரியாலாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சவூதி அரேபிய மனித வளங்கள் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது

ஆட்சேர்ப்புத்துறையில் ஏற்பட்டுவரும் செலவுகளுக்கு ஏற்ப இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 09



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மூச்சும் குணமும்

ஒரு மனிதன் எப்படி மூச்சுவிடுகின்றான் என்பதை வைத்து அவனுடைய குணம் என்ன அப்படி என்று சொல்லி விடலாம்! நாம் விடும் மூச்சுக்கும் நம் குணத்திற்கும் சம்பந்தம் உண்டு.

நியூயோர்க் யூனிவர்சிட்டியிலேயுள்ள மனோதத்துவ நிபுணர் ஒருத்தர் இப்படி சொல்கிறார். வெறுமனே சொல்லி விடவில்லை.

160 பேரை சோதனை செய்து பார்த்துவிட்டு அதுக்குப் பின் ஒவ்வொருத்தரும் எப்படி மூச்சுவிடுகிறார்கள் அப்படி என்று பார்த்து விட்டு அவர்கள் குணத்தையும் கவனித்திருக்கார். அவர் ஆராய்ச்சி செய்து என்ன கண்டுபிடித்தார் தெரியுமா?

மெதுவாக- அதேசமயத்திலே மிகவும் நீளமா மூச்சு இழுத்து விடுறவங்க பலபேரு இருப்பாங்க. அவங்க குணம் எப்படி இருக்கும் தெரியுமா?அவங்களுக்கு ரொம்ப மனோதிடம் உண்டு. உறுதியான எண்ணம் உண்டு. ரொம்பவும் தைரியசாலியா இருப்பாங்க.

அவங்களுக்கு புத்தி-உடம்பு இது இரண்டுமே சுறுசுறுப்பா இருக்கும்!தங்களையே கட்டுப்படுத்திக்கிறதுலையும் இவங்க ரொம்ப கெட்டிக்காரங்க!

புதுசா எதையும் செய்து பார்ப்பதிலே ஆர்வம் உள்ளவர்கள்.

இவங்க இப்படி...இன்னொரு ரகம் எப்படி தெரியுமா?ரொம்பவும் மேம்போக்கா-அதேநேரத்திலே அவசரம் - அவசரமா மூச்சு இழுத்து விடறவங்க!இவங்க குணம் எப்படி?அது வேறு மாதிரியா இருக்கும்.

இவங்க... ரொம்பவும் பயந்தவங்க... வெட்கப்படுகிறவர்கள். கூச்ச சுபாவம் உண்டு... இவர்களுக்கு தன்னம்பிக்கை குறைவாக இருக்கும். எப்பவும் அடுத்தவங்களையே நம்பி இருப்பாங்க! இதையெல்லாம் சோதித்துப் பார்த்துவிட்டுத்தான் அந்த மனோதத்துவ நிபுணர் பேர்சினாலிட்டிக்கும் பிறீத்திங் ஸ்ரையிலுக்கும் சம்பந்தம் உண்டு என்று முடிவு பண்ணினார். நம்ம பக்கத்துலே சில சாமியார்கள் உயிரோட பூமிக்கு அடியிலே இருந்து விட்டு கொஞ்ச நாள் கழிச்சி வெளியிலே வருவாங்க... கேள்விப்பட்டிருப்பீர்கள். பம்பாயிலே ஒரு சுவாமிஜி.பூமியிலே ஒரு குழிவெட்டி உள்ளே போயிட்டாரு -புதைத்துவிட்டார்கள்.

அப்புறம் என்ன... தண்ணீர்... ஆகாரம் இரண்டும் கிடையாது! ஆறுநாள் பூமிக்குள்ளே இருந்துவிட்டு அதுக்கப்புறம் வெளியே வந்துவிட்டாரு! பலபேரு இதை நேரிலே பார்த்தாங்க! இது மந்திரமா? தந்திரமா? இதுக்கு விஞ்ஞான பூர்வமான விளக்கம் என்ன?

இதை சில விஞ்ஞானிகள் சோதனை பண்ணி பார்த்திருக்காங்க. பம்பாயிலே ஆர்.ஜே வாக்கில் ஆராய்ச்சியாளர் இதைப்பத்தி சில பரிசோதனைகள் பண்ணிப் பார்த்தார்! டில்லியிலே கூட இதைப்பற்றி ஓர் ஆராய்ச்சி நடந்தது! ஆராய்ச்சி பண்ணினவர் வி. கே. ஆனந்த், றமனான் ஜோகி அப்படி என்று ஒரு சுவாமிஜி. சொந்த ஊரு ஆந்திரா.

அவரை வைத்து இந்த ஆராய்ச்சி நடந்தது!All India Institute of Medical Sciences அப்படி ஒன்று இருக்கு. அங்கேதான் இது நடந்தது.

அந்த யோகியை என்ன பண்ணினாங்க தெரியுமா?

ஒரு பெட்டியிலே வைத்து அடைத்து பூமிக்கு அடியிலே புதைத்து வைத்துவிட்டார்கள்!

பத்து மணி நேரம் அவர் தொடர்ந்து உள்ளேயே இருந்தார்!அப்போ அவரு உடம்புலே ஏற்படற மாறுதலை எல்லாம் வெளியிலே இருந்தே கருவிகள் மூலமாக கணக்கெடுத்தார்கள்.

அதையெல்லாம் வைத்துப் பாத்ததுக்கு அப்புறம்தான் புரிந்தது! இது மந்திரமும் இல்லை! தந்திரமும் இல்லை. மனித எந்திரம்தான் இதுக்குக் காரணம் என்று.

அதாவது நம் உடம்பு இருக்கே! அது சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி தன்னை மாற்றிக் கொள்ளுமாம்.திடீர் என்று இருட்டுக்குள்ளே போனா கொஞ்ச நேரத்துலே கண்ணுக்கு பாக்கற சக்தி லேசா வந்துவிடுகிறது அல்லவா.அது மாதிரி!

அதாவது-பூமிக்கு அடியிலே இருக்கிறப்போ, குறைஞ்ச அளவு பிராண வாயுவை வைத்துக்கொண்டே உடம்பு அட்ஜஸ்ட் பண்ணிக்குது! பழக்கம்தான் இதுக்கு வேணும். வேறே ஒண்ணும் இல்லை!

நான் வழக்கம்போல இந்தத் தகவலையும் ஏற்கனவே ஒருத்தரிடம் சொல்லிக்கொண்டிருந்தேன்... அதுக்கு அவர்- என்ன சார்.. பத்து மணி நேரம் பூமிக்கு அடி யிலே அன்ன ஆகாரம் இல்லாமல் இருக்கிறது ஒரு பெரிய சாதனையா?

நான் பத்து வருஷமா கிட்டத்தட்ட அதேநிலைமையிலே இருந்து ஒரு பெரிய சாதனையை செய்து கொண்டு வருகின்றேன் என்றார். "என்ன சொல்றீங்க " என்றேன்! "என் சம்சாரத்தோட குடும்பம் நடத்திட்டு வர்றேனே.. அதை சொல்றேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.
## கலைமாணிப் பட்டப்படிப்பு(வெளிவாரி)
## புதிய அனுமதி-2020/2021

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த கலைமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அங்கீரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் 2020 அல்லது அதற்கு முன்னர் ஒரே தடவையில் சித்தியடைந்து இருப்பதுடன், பொதுஅறிவுப் பரீட்சையில் 30% இற்கு குறையாத புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

**அல்லது**

NVQ Level-04, டிப்ளோமாக்கள், மொழி டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் தொடர்புடைய மற்றும் சமமானது என கருதப்படவல்ல தகைமைகளைக் கொண்டவர்கள்.

**மாணவர்தெரிவு:**

விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை அல்லது பொது உளச்சார்புப்பரீட்சை மூலமாகவோ அல்லது அவ்விரண்டினதும் மூலமாகவோ தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 20.02.2024**

**விண்ணப்பம் செய்யும் முறை**

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் இணையத்தளத்தில் **(www.codl.jfn.ac.lk)** பதிவினை மேற்கொள்ள முடியும். **எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் 89003234002142** எனும் வங்கி கணக்கிலக்கத்திற்கு விண்ணப்பக் கட்டணமாக 1000.00 ரூபாவினை செலுத்தி அதன் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை இணையத்தள முகவரியில் பதிவேற்றம் செய்வதோடு விண்ணப்பத்தின் மூலப்பிரதியை நேரடியாக அல்லது தபால் மூலமாக சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களின் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கலைமாணிப் பட்டப்படிப்பு- 2020/2021" எனக்குறிப்பிட்டு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும்:

**உதவிப்பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

**பின்வரும் காரணங்களுக்காக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்:**

- அனுமதிக்கான தகைமைகளினை விண்ணப்பதாரி கொண்டிருக்கத் தவறுதல்/ தகைமைகளினை முறையாக படிவத்தில் பூரணப்படுத்தத் தவறுதல்.
- விண்ணப்பப்படிவத்தினை மேற்கண்ட இணையத்தளத்தில் முறையாக தரவேற்றம் செய்யத் தவறுதல்/ விண்ணப்பப்படிவத்தின் மூலப்பிரதியினை நேரடியாக/ தபால் மூலம் சமர்ப்பிக்காது தவறுதல்.
- விண்ணப்பக் கட்டணமான 1000.00 ரூபாவினை செலுத்தத் தவறுதல் அல்லது அதன் மூலப்பிரதியினை இணைக்காது சமர்ப்பித்தல்/ அதனைத் தரவேற்றம் செய்யத் தவறுதல்.
- விண்ணப்ப முடிவுத்திகதியான 20.02.2024இற்கு பின்னர் சமர்ப்பித்தல்.

மேலதிக விபரங்களுக்கு **www.codl.jfn.ac.lk** அல்லது 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(சி-8153)

# மன்னார் கடற்பரப்பில் 18 இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 18 இந்திய கடற்றொழிலாளர்கள் நேற்று முன்தினம் மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டம் தாழ்வுபாடு கடல் பகுதியை அண்மித்த கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக உள்நுழைந்து இரண்டு டோலர் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக கடற்றொழிலாளர்களே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான 18 கடற்றொழிலாளர்களும் பயன்படுத்திய இரண்டு டோலர் படகுகளும் கடற்படையினரால் தாழ்வுபாடு கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்டன.

அதன்பின்னர் 18 கடற்றொழிலாளர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

குறித்த படகுகளில் இருந்து பல ஆயிரக்கணக்கான கிலோ எடை கொண்ட குஞ்சு மீன்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-285)

# புதுக்குடியிருப்பில் நாளை கதவடைப்பு போராட்டம்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேசசபை வாயிலை மறித்து போராட்டத்தினை முன்னெடுக்க இருப்பதாக புதுக்குடியிருப்பு வர்த்தக சங்க தலைவர் த.நவநீதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை அசமந்தமான செயற்பாட்டையே செய்து வருகின்றது. மாகாணசபை கலைக்கப்பட்டதன் பின்னர் பிரதேச சபையின் செயற்பாடு முழுவதுமாக குறைவடைந்துள்ளது.

இதனால் வணிக கழகங்கள் இணைந்து அதன் கீழ் இயங்கும் 384 கடைகளும் மூடப்பட்டு பணியாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு எதிராக பிரதேச சபை வாசலை மறித்து போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

கிராம மக்கள், வர்த்தகர்கள், பணியாளர்கள், அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒத்துழைப்பு தந்து குறித்த போராட்டத்திற்கு ஆதரவு அளிக்குமாறு வணிகர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது. (நி-5-6-299)

# இராசிபலன்

18.01.2024
தை 04, வியாழக்கிழமை
அட்டமி முன்னிரவு 1.34 மணிவரை
ரேவதி முற்பகல் 8.36 மணிவரை

சுபநேரம் -8.05-9.35 மணிவரை
இராகுகாலம்-2.05-3.35 மணிவரை

சந்திராஷ்டமம்-பூரம்.

வளவன்


மேஷம்

வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்.


கடகம்

திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் கைகூடும் வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


துலாம்

வியக்கும் வாழ்வு அமைய விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டிய நாள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


மகரம்

விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்; சுப செலவுகள் கூடும்.


ரிஷபம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.


சிம்மம்

மறைமுகப் போட்டிகளை எளிதில் சமாளித்து விடுவீர்கள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


விருச்சிகம்

எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், சுவாரஸ்ய மான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு,போசனசுகமுண்டு.


கும்பம்

சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மிதுனம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.


கன்னி

மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் இடம்பெறலாம், வார்த்தைகளில் நிதானம் தேவை,புதிய பொறுப்புக்களை யோசித்துச் செய்வது நல்லது, பிரயாண பயமுண்டு.


தனுசு

பொன்னான எதிர்காலம் அமைய புதிய வழி பிறக்கும் புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை கூடும்.


மீனம்

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறப்பதற்கு நினைக்க வேண்டும், சிரிப்பதற்கு மறக்க வேண்டும்.

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

381





"அது நன்றாய்த் தெரிகிறது. இல்லாவிடில் இவ்வளவு விரைவில் இங்கு வந்திருக்க முடியுமா? இப்படிப்பட்ட அரிய உதவி செய்தவருக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்!" என்று சொல்லிவிட்டு, இளவரசர் வந்தியத்தேவனை மார்புற அணைத்துக் கொண்டார். அப்போது வந்தியத்தேவன் சொர்க்கலோகத்தில் தான் இருப்பதாகவே எண்ணினான். அவன் உடம்பிலிருந்து வலியெல்லாம் மாயமாய் வந்துவிட்டது.

### முப்பத்தோராம் அத்தியாயம் "ஏலேல சிங்கன்" கூத்து

வனத்தின் மத்தியில் உலர்ந்த குளத்தைச் சுற்றி மரங்கள் வளைவு வரிசையாக வளர்ந்து அதனால் இடைவெளி ஏற்பட்டிருந்த இடத்தில் சுமார் ஆயிரம் சோழ வீரர்கள் தாவடி போட்டிருந்தார்கள். அவர்களுடைய சாப்பாட்டுக்காகப் பெரிய பெரிய கல்லடுப்புகளில் ஜுவாலை வீசிய நெருப்பின் பேரில் பிரம்மாண்டமான தவலைகளில் கூட்டாஞ்சோறு பொங்கிக் கொண்டிருந்தது. சட்டிகளிலும் அண்டாக்களிலும் வெஞ்சனங்கள் வெந்து கொண்டிருந்தன. இவற்றிலிருந்து எழுந்த நறுமணம் அந்த வீரர்கள் நாவில் ஜலம் சுரக்கச் செய்தது.

சோறு பொங்கி முடியும் வரையில் பொழுது போவதற்காக அவர்கள் ஆடல் பாடல் களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தார்கள். இச்சமயத்தில் அவர்களுடைய உள்ளங் கவர்ந்த அரசிளங் குமாரரும் வந்து விடவே, அவ்வீரர்களின் குதூகலம் அளவு கடந்ததாயிற்று. அந்த எல்லைக் காவல் படையின் தளபதி மிகவும் சிரமப்பட்டு அவர்களுக்குள்ளே ஒழுங்கை நிலை நாட்டினார். எல்லோரையும் அமைதியுடன் பாதி மதியின் வடிவமான வட்டத்தில் வரிசையாக உட்காரும் படி செய்தார்.

பெரியதொரு ராட்சத மரத்தை வெட்டித் தள்ளி அதன் அடிப்பகுதியை மட்டும் பூமிக்கு மேலே சிறிது நீட்டிக்கொண்டிருக்கும்படி விட்டிருந்தார்கள். இளவரசர் வந்து அந்த அடிமரத்துச் சிம்மாசனத்தின்மீது அமர்ந்தார். இப்போது அவர் யானைப் பாகன்போல் உடை தரித்திருக்கவில்லை. தலையில் பொற்கிரீடமும் புஜங்களில் வாகு வலயங்களும் மார்பில் முத்து மாலைகளும் அணிந்து, அரையில் பட்டுப்பீதாம்பரம் தரித்து அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி எல்லைக்காவல் தளபதியும் வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் உட்கார்ந்திருந்தார்கள்.

இளவரசரை மகிழ்விப்பதற்காக ஏற்பாடு செய்திருந்த ஏலேல சிங்கன் சரித்திரக் கூத்து ஆரம்பமாயிற்று. இந்தச் சமயம் சோழ வீரர்கள் இலங்கையில் பெரும் பகுதியைப் பிடித்திருந்ததுபோல் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு தடவை தமிழ் வீரர்கள் ஈழநாட்டைக் கைப்பற்றியிருந்தார்கள். அப்போது அத்தமிழ் வீரர்களின் தலைவனாக விளங்கியவன் ஏலேல சிங்கன். அவனால் துரத்தப்பட்டு இலங்கை அரசன் சில காலம் மலைநாட்டில் போய் ஒளிந்திருந்தான். அவனுடைய புதல்வனின் பெயர் துஷ்டகமனு. இவன் பொல்லாத வீரன். இலங்கையைத் திரும்பவும் ஏலேல சிங்கனிடமிருந்து கைப்பற்ற வேண்டுமென்று நெடுங்காலம் கனவு கண்டான். அவ்வீரன் சிறு பிள்ளையாயிருந்தபோது ஒருநாள் படுக்கையில் கையையும் காலையும் மடக்கி ஒடுக்கி வைத்துக் கொண்டு படுத்திருந்தான். அவனுடைய அன்னை, "குழந்தாய்! ஏன் இப்படி உன்னை நீயே குறுக்கிக் கொண்டு படுத்திருக்கிறாய்? தாராளமாய்க் காலையும் கையையும் நீட்டி விட்டுப் படுத்துக்கொள்வதுதானே!" என்றாள். அப்போது துஷ்டகமனு, "தாயே! என்னை ஒரு பக்கத்தில் தமிழ் வீரர்கள் நெருக்குகிறார்கள். மற்றொரு பக்கத்தில் கடல் நெருக்குகிறது. நான் என்ன செய்வேன்? அதனாலேயே உடம்பைக் குறுக்கிக் கொண்டு படுத்திருக்கிறேன்!" என்றான். இத்தகைய வீரன் காளைப் பருவம் அடைந்த போது படை திரட்டிக் கொண்டு போன படைகள் சின்னாபின்னமாகிச் சிதறி ஓடிவிட்டன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முல்லா வசூலிக்கும் கடன்



முல்லா ஒருநாள் ஒரு பெரிய பணக்காரிடம் சென்றார். ஒரு மனிதனுடைய கஷ்ட நிலையைக் கண்டு மனம் பொறாமல் தங்களிடம் வந்திருக்கிறேன். அந்த மனிதன் ஒரு மனிதரிடம் கொஞ்சம் பணத்தை கடனாக வாங்கி விட்டான்.

கடன் வட்டிக்கு வட்டியாக பல மடங்கு பெரிய தொகையாக வளர்ந்து விட்டது. அந்தக் கடனைக் கொடுக்க முடியாமல் அவன் மிகவும் சங்கடப்படுகிறான். கடன் தொல்லை தாள முடியாமல் அவன் தற்கொலை செய்து கொள்வானோ என்று கூட எனக்கு அச்சமாக இருக்கின்றது. அந்த மனிதனின் கடனை அடைக்க ஒரு ஆயிரம் பொற்காசுகள் இருந்தால் கொடுங்கள். உரிய காலத்தில் உங்கள் தொகையை அவன் திருப்பிக் கொடுத்து விடுவான். அதற்கு நான்உத்தரவாதம் கொடுக்கிறேன் என்று முல்லா மிகவும் உருக்கமாக கூறினார்.

அதைக் கேட்டு மன முருகிய செல்வந்தர் முல்லாவிடம் ஆயிரம் பொற்காசுகளைக் கொடுத்து "அவ்வளவு கஷ்டப்படும் மனிதன் யார்?" என்று கேட்டார். "வேறு யாருமில்லை, நான் தான்" என்று கூறிச் சிரித்தவாறு முல்லா சென்று விட்டார். இரண்டொரு மாதங்கள் கழித்து செல்வந்தரிடம் வாங்கிய பணத்தை முல்லா திருப்பி கொடுத்து விட்டார்.

இரண்டொரு மாதங்கள் கழித்த பிறகு ஒரு நாள் அதே பணக்காரரிடம் வந்தார்.

"யாரோ ஒருவர் கடன் வாங்கிக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறாராக்கும் அவருக்கு உதவ என்னிடம் கடன் வாங்க வந்திருக்கிறீர் போலிருக்கிறது" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் செல்வந்தர். "ஆமாம்" என்று முல்லா பதில் சொன்னார்.

"அந்தக் கஷ்டப்படும் ஆள் நீர்தானே" என்று செல்வந்தர் கேட்டார். "இல்லை, உண்மையாகவே ஓர் ஏழை தான் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறான்" என்றார் முல்லா.

"உம்மை எவ்வாறு நம்ப முடியும்? பணத்தை வாங்கிக் கொண்ட பிறகு நான்தான் அந்த ஏழை என்று கூறமாட்டீர் என்பது என்ன நிச்சயம்?" என்று செல்வந்தர் கேட்டார்.

"நீங்கள் இவ்வாறு சந்தேகப்படுவீர் என்று தெரிந்துதான் அந்த ஆளை நேரில் கொண்டு வந்து வாசலில் நிறுத்தியிருக்கிறேனே" என்றார் முல்லா. பிறகு வாசல் பக்கம் சென்று ஒரு ஏழையை அழைத்து வந்தார். "நீர் தான் கடன் வாங்கிக் கஷ்டப்படும் ஏழையா?" என்று செல்வந்தர் கேட்டார்.

"ஆமாம்" என்று அந்த ஏழை பதில் சொன்னான்.

செல்வந்தர் முல்லா சொன்ன தொகையை ஏழையிடம் நீட்டினார். அதனை முல்லா கை நீட்டி வாங்கிக் கொண்டார்.

"என்ன பணத்தை நீர் வாங்கிக் கொண்டீர் பழையபடி என்னை ஏமாற்றுகிறீரா?" என செல்வந்தர் கேட்டார்.

" நான் பொய் சொல்லவில்லையே கடன் வாங்கியது அந்த ஏழை தான். ஆனால் அவனுக்குக் கடன் கொடுத்தவன் நான். கொடுத்த கடன் இப்போது வசூல் செய்கிறேன் " என்று கூறியவாறு ஏழையை அழைத்துக் கொண்டு முல்லா நடந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை உணரும்போது, அதை மீண்டும் செய்யாதிருக்கவும் உறுதி எடுக்க வேண்டும்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஈழத் தமிழ் மக்களுக்கு சூரியபகவான் எழுதிய கடிதம்

என்றும் என் அன்புக்குரிய ஈழத் தமிழ் உறவுகளுக்கு முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தைத்திங்கள் முதலாம் நாள் பொங்கிப் படைத்து என் மீது நீங்கள் கொண்ட அன்பையும் செய்ந்நன்றி மறவாத உங்கள் உயர்ந்த பண்பையும் நிரூபித்து நின்றமைக்கு பல கோடி நன்றிகள்.

என்றும் என் பணி உங்களுக்காகத் தொடரும் என்ற உறுதிமொழியையும் இவ்விடத்தில் தந்தருளுகின்றேன்.

மேலும் உங்களுக்கான இக்கடிதத்தை உடனடியாக எழுத வேண்டும் என எண்ணியிருந்தேன்.

ஆயினும் எனக்கு ஏற்பட்ட அஜீரணக் கோளாறு காரணமாக இக்கடிதத்தை உடனடியாக எழுத முடியாமல் போயிற்று. அதற்காக வருந்துகிறேன்.

அஜீரணக்கோளாறுக்கு என் வைத்தியரிடம் மருந்து எடுத்தேன்.

பொங்கல் ஒவ்வாமை காரணமாகவே அஜீரணம் ஏற்பட்டதாக அவர் கூறினார்.

ஆம், நீங்கள் எனக்குப் படைத்த வாழைப்பழம் மற்றும் மாம்பழங்களில் பெரும்பாலானவை மருந்து தெளித்து பழுக்க வைக்கப் பட்டவை.

தவிர, நீங்கள் என் மீது கொண்ட பாசத்தின் காரணமாக விளாம்பழம் படைத்தீர்கள். ஆனால் அந்த விளாம்பழங்களில் கணிசமானவை விளாம் பிஞ்சுகளைப் பிடுங்கி சுடுநீரில் அவித்தும் தண்ணீரில் பல நாட்கள் ஊறவைத்தும் பழுக்க வைத்தவை என்பதை என்னால் உணர முடிந்தது.

நீங்கள் விளாம்பழத்தை உடைத்தபோது அவதானித்தேன். விளாம்பழத்தின் கோது நலிந்து போயிருந்தது. இதை நீங்களும் கண்டிருப்பீர்கள். மிகவும் தடிப்பான விளாம்பழத்தின் கோது நலிந்து போகின்ற அளவுக்கு அது வெந்நீரில் அவிக்கப்பட்டிருக்கிறது.

இதுதவிர, நீங்கள் பொங்கிய அரிசி அதீத உரப் பாவனையாலும் கடுமையான கிருமிநாசினிப் பயன்பாட்டாலும் விளைவிக்கப்பட்ட நெல்லில் இருந்து பெறப்பட்டதென்பதைத் தெரிந்து கொண்டேன்.

இதைவிட உங்களின் தைப்பொங்கலில் படைக்கப்பட்ட அனைத்தும் சந்தைகளில் வாங்கியவை என்பதையும் என்னால் உணர முடிந்தது.

அன்புக்குரிய ஈழத் தமிழ் உறவுகளே! ஆண்டில் ஒரு தடவை நீங்கள் படைத்த பொங்கலை உண்ணுகின்ற எனக்கே அஜீரணம் என்றால், நாள்தோறும் அவற்றை உணவாக உண்ணுகின்ற உங்களின் கதி என்னவென்று சிந்தித்தபோது வேதனையடைந்தேன்.

ஆம், உங்கள் உடல் நலம் பாதிக்கப்படுவதற்குக் காரணம் நீங்கள் நஞ்சான உணவுப் பொருட்களையும் பழவகைகளையும் உண்பதுதான்.

எனவே அவற்றைத் தவிருங்கள். உங்கள் வீட்டில் பழமரங்களை நடுங்கள். வயலில் நெல் விதையுங்கள். உங்கள் உணவுக்கான நெல் விளைவதற்கு இயற்கைப் பசளையிடுங்கள்.

உங்கள் வீட்டில் விளைந்த பழவகைகளையும் உங்கள் வயலில் விளைந்த அரிசியிலும் எனக்குப் பொங்கல் செய்து தாருங்கள். அது உங்களுக்கும் தொடர்ந்து உணவாகி உங்கள் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கும். நீங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பது தான் என் வேணவா.

ஆகையால் இன்றே உங்கள் வளவில் மா, பலா, வாழை ஆய முக்கனிகளை நடுங்கள். கிணற்றடியில் கரும்பை நாட்டுங்கள். வேலி ஓரத்தில் செவ்விளநீர் மரத்தை நடுங்கள். இதைச் செய்வதுதான் தைப்பொங்கலின் நோக்கம் என்றறியுங்கள். நன்றி.

# பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ரணிலும் களமிறங்க வாய்ப்பு

## நாமல் எம்.பி தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலின்போது மொட்டுக் கட்சியின் சார்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் போட்டியிடும் சந்தர்ப்பம் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும்போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தற்போதைக்கு மொட்டுக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவதற்கான நான்கு வேட்பாளர்களின் பெயர்கள் பரிசீலனையில் உள்ளது.

குறித்த நான்கு பெயர்களில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் உள்ளது.

எவ்வாறெனினும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய ஒருவரே வேட்பாளராக நியமிக்கப்படுவார்.

அதன் காரணமாக கடைசி நேரத்தில் இந்தப் பட்டியலில் பெயர் இல்லாத புதிய ஒருவர் கூட களமிறக்கப்படலாம்.

வேட்பாளர் குறித்து கவலைப்படத் தேவையில்லை. வேட்பாளர் யார் என்பது முக்கியமல்ல. வெற்றி பெற முடியுமா என்பதுதான் முக்கியம்.

ஏனெனில் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கும் வேட்பாளரை வெற்றிபெறச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

அத்துடன், தமது அரசியல் முகாமுக்கு வெற்றியைத் தரும் எந்தக் கட்சி அல்லது சக்தியுடன் வேண்டுமானாலும் பேச்சுவார்த்தை நடத்த தயார்.

மேலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை மறுசீரமைப்பதற்காக கிராமிய மக்களைக் தெளிவூட்டும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார். (ம-7)

## ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரத்தை நாளை ஆரம்பிக்கிறது ஐ.தே.க

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்களை நாளை 19ஆம் திகதிமுதல் ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்க உள்ளது. அதன்பிரகாரம் ஐ.தே.கவின் முதல் பொதுக் கூட்டம் கொழும்பில் நடைபெற உள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் இவ்வாண்டு ஒக்டோபர் இறுதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும். அரசாங்கத்தால் கடந்தகாலத்தில் ஏனைய தேர்தல்களை பிற்போட முடிந்தாலும் ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முடியாது.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் அல்லது சர்வஜன வாக்கெடுப்பொன்றை கட்டாயம் நடத்தியே ஆக வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள பின்புலத்தில், அனைத்துக் கட்சிகளும் தமது பிரசார நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளன.

நாளை 19ஆம் ஐ.தே.க தமது பிரசாரக் கூட்டத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஐ.தே.க பொது வேட்பாளராக அறிவிக்க உள்ளது. கடந்த வாரம் இடம்பெற்ற கட்சியின் நிர்வாகக் குழு கூட்டத்திலும் ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நிறுத்த தீர்மானிக்கப்பட்டது.

என்றாலும், ஜனாதிபதி நீண்ட உத்தியோகப்பூர்வ பயணமொன்றை சுவிஸ்சர்லாந்து மற்றும் உகண்டாவுக்கு மேற்கொண்டுள்ளார். இதனால், இந்தக் கூட்டம் ஏற்கனவே திட்டமிட்டது போல் பிரமாண்டமாக நடைபெறுமா அல்லது இடைநிறுத்தப்படுமா என்பது தொடர்பிலான அறிவிப்புகள் எதனையும் ஐ.தே.க இதுவரை வெளியிடவில்லை.

கட்சியின் நிர்வாகக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நாளை முதல் நாடு முழுவதும் தொடர்க் கூட்டங்களை ஐ.தே.க நடத்த உள்ளது. (ம-7)

## சட்டவிரோத மின்வேலியால் சுமார் 50 யானைகள் பலி

2023ஆம் ஆண்டில் சட்டவிரோத மின்வேலிகள் காரணமாக சுமார் 50 யானைகள் உயிரிழந்துள்ளதாக இலங்கை மின் சார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், பல்வேறு மனித நடவடிக்கைகளால் 2023 ஆம் ஆண்டில் 474 காட்டு யானைகளும் உயிரிழந்துள்ளதாக அந்த சபை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

புள்ளிவிபரங்களுக்கமைய, இலங்கையில் சுமார் 6 ஆயிரம் காட்டு யானைகள் வசித்து வரும் நிலையில் இந்த மரணங்கள் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த சட்டவிரோத செயல்கள் தொடர்பில் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள மின்சார சபை அதற்கு மக்களின் ஆதரவும் தேவையெனவும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## விண்ணப்பம் கோரல்

நில அளவைத் திணைக்களத்தினால் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான (பயிலுநர் தரத்திற்கு) ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த உயர்தரத்தில் கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப பிரிவுகளில் சித்தியடைந்த 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டோர் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

இப் பரீட்சைக்கான விண்ணப்ப படிவங்களை, பரீட்சை விதிமுறைகளை 29.12.2023 அன்று வெளியான வர்த்தமானியில் பார்வையிடலாம்.

பரீட்சைக் கட்டணம் 800 ரூபாயாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்களை 29.01.2024 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதம நில அளவையாளர் தேர்வுக்கிளை நில அளவையாளர் திணைக்களம், இல.150, நாரஹேன்பிட்டிய கொழும்பு 5 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கொத்து ரொட்டியை இரவு உணவாக உட்கொண்ட

### 3 பிள்ளைகளின் தாய் உயிரிழப்பு

(கொழும்பு)

இரவு நேர உணவாக கொத்துரொட்டியை உட்கொண்டுவிட்டு உறங்கிய 3 பிள்ளைகளின் தாயொருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஹொரணை பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடைய 3 பிள்ளைகளின் தாயாவார்.

உயிரிழந்தவரின் உடல் எடை கடந்த 3 வருடங்களாக அதிகரித்து வந்த நிலையில் இவர் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இறந்தவருக்கு நித்திரைக்கு செல்வதற்கு முன்னர் ஒட்சிசன் வாயு இயந்திரத்தை பயன்படுத்துமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இவர் கடந்த 14 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் தனது கணவருடன் வெளியில் சென்று கொத்து ரொட்டியை உணவாக உட்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து வீட்டிற்கு வந்த பெண் அவரது ஒட்சிசன் வாயு இயந்திரத்தை பொருந்தி விட்டு உறங்கியுள்ள போது தூக்கத்தில் அதனை கழற்றி விட்டுள்ளார்.

இந்நிலையில், அதிகாலை 4 மணியளவில் தனது மனைவியை அவதானித்த கணவர், அவர் தூக்கத்திலிருந்து விழிக்காததால், ஹொரணை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளார்.

குறித்த பெண், அதிக உடல் எடையினால் நுரையீரலில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக ஒட்சிசன் வாயு குறைந்தமையால் சுவாசிப்பதற்கு சிரமப்பட்டு உயிரிழந்துள்ளதாக திடீர் மரண விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

02

ஆனால் மக்கள் அவனது நில புலங்களைத் திருத்தி உழுது பயிரிட்டுக் கொடுத்தனர். சில சமயங்களில் சன்மானங்களும் வழங்கி வந்தனர்.

“கபடகம்” ன்று சொல்லப்பட்ட அரசனுக்குச் சொந்தமான கிராமங்களிலுள்ள அரச மானிய நிலங்களை மக்கள் உழுது பயிரிட்டு வந்தனர். அதேபோன்று நிந்தகம் எனப்பட்ட பிரபுகளுக்குக் கொடுக்கப்பட்ட பிரபுமானிய நிலங்களையும் தேவாலகம், விகாரகம் எனப்பட்ட தேவமானிய நிலங்களையும் மக்கள் பயிரிட்டனர். அரசனுக்குச் செய்யும் சேவைகளுக்காக அவன் மக்களுக்கு நிலங்களை இலவசமாய் உதவியும் வந்தான்.

அக்காலத்தில் வர்த்தகம் அரசனது ஏகபோக உரிமையாயிருந்தது. வெளிநாட்டு வர்த்தகத்திற்காக உள்நாட்டில் விவசாயம் நன்கு நடைபெற்றதாகத் தெரியவில்லை. பண்டமாற்று முறை பெரும்பாலும் வழக்கத்திலிருந்து வந்தது. மிகக் குறைந்த அளவு நாணயங்களும் பாவனையில் இருந்தன. தான் விளைவித்த ஒரு பண்டத்தைக் கொடுத்துத் தனக்கு தேவையான மற்றொரு பண்டத்தைப் பிறரிடமிருந்து வாங்கி மக்கள் சீவியஞ் செய்து வந்தனர்.

### சிலுவை யுத்தமும் போர்த்துக்கேயரின் கீழைத்தேசங்கள் நோக்கிய பயணமும்

கிறிஸ்தவ சமயத்தின் ஸ்தாபகரான இயேசு பாலஸ்தீனத்தில் பெத்தலகேம் எனும் ஊரில் பிறந்தவரென்றும் ஜெருசலேமில் சிலுவையில் அறையப்பட்டு மரணமடைந்தவரென்றும் நாம் அறிவோம். இஸ்லாமியர்களால் அப்பிரதேசங்களுக்கு சவால்கள் ஏற்பட்டபோது ஐரோப்பா முழுவதிலும் பரவியிருந்த பாப்பரசரைத் தலைவராகக் கொண்ட கிறிஸ்தவர்கள் ஆத்திரமடைந்தனர்.

பல நூற்றாண்டுகளாக உரோமப் பேரரசின் கீழிருந்த பாலஸ்தீனர் 7 ஆம் நூற்றாண்டில் அரேபியர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தனர். எனினும் கிறிஸ்தவர்கள் பாலஸ்தீனத்திலிருந்த புனிதத் தலங்களுக்கு எவ்வித இடையூறுமின்றி சென்று வந்தனர். கி.பி 11 ஆம் நூற்றாண்டளவில் செல்யுக்ஸ் துருக்கியர்கள் அப்பிரதேசங்களைக் கைப்பற்றினர். அதன்பின்னர் கிறிஸ்தவர்கள் அப்பிரதேசங்களில் திருயாத்திரை செல்வதற்குத் தடையேற்பட்டது. புனித யாத்திரையை மேற்கொண்டவர்கள் துன்புறுத்தப்பட்டதுடன், சிலர் கொல்லப்பட்டனர்.

இதனைக் கண்டு கலக்கமடைந்த பாப்பரசர் புனித பூமியைப் பாதுகாப்பதற்காக ஒன்று திரளும்படி ஐரோப்பாவிலிருந்த கிறிஸ்தவர்களைக் கேட்டுக் கொண்டார். இதன் விளைவாகப் பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி போன்ற சகல கிறிஸ்தவ நாடுகளும் அரசர்கள், பிரபுக்களின் தலைமையின் கீழ் பெருந்திரளாக அணி திரண்டனர். இவர்கள் செய்த யுத்தம் கிறிஸ்தவ சமயத்தை முன்னிட்டு செய்த படியால் “சிலுவை யுத்தம்” என்று குறிப்பிட்டனர்.

கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவிய சிலுவை யுத்தம் முஸ்லிம்களுக்கு வெற்றியைக் கொடுத்து 1453ஆம் ஆண்டு முடிவுற்றது. அப்போது கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றிக் கொண்ட துருக்கிய முஸ்லிம்கள் ஐரோப்பியர் வர்த்தகப் பொருட்களைப் பெறுவதில் பல தடைகளையும் விதித்தனர். அதன்படி வர்த்தகப் பொருட்களின் விலைகளை அதிகரிப்பதன் மூலம் அதிக இலாபமீட்டுதல், உரிய காலத்துக்கு வர்த்தகப் பொருட்களை வழங்காதிருத்தல், அதிக வரி அறவிடுதல் முதலான முஸ்லிம்களின் செயற்பாடுகள் ஐரோப்பியரை சிரமத்துக்குள்ளாக்கின. இதனால் நேரடியாகச் சென்று வர்த்தகப் பொருட்களைப் பெற அவர்கள் விரும்பினர்.

கீழைத்தேச வர்த்தகம் மூலம் கிடைத்த பொருளாதார பலமே துருக்கியரைச் சிலுவை யுத்தங்களில் வெற்றி கொள்ளச் செய்தது என்பதை உணர்ந்த போர்த்துக்கேயர், கீழைத்தேசங்களுக்குச் சென்று முஸ்லிம்களின் வர்த்தக ஏகபோக உரிமையை இல்லாமல் செய்து விடத் தீர்மானித்தனர். அது மாத்திரமன்றி கீழைத்தேச வர்த்தக ஏகபோக உரிமையைத் தம் வசமாக்கிக் கொள்வதும் அவர்களது எதிர்பார்ப்பாக இருந்தது.

15ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கல் மன்னனான ஜோன் ஆபிரிக்காவைச் சுற்றிப் பயணம் செய்து இந்தியாவை அடைவதற்கான கடற்பாதை ஒன்றைக் கண்டுபிடித்தால் முஸ்லிம்களிடம் இருக்கும் வர்த்தக உரிமையைக் கைப்பற்றலாம் என்பதை அறிந்திருந்தான். தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாட்டு மக்களை ஊக்கப்படுத்தியதுடன், கடற் பயணங்களுக்கான உதவிகளையும் இம்மன்னன் வழங்கினான். போர்த்துக்கல் கடற்கரையோர நாடானபடியால் மக்கள் பயமின்றி கடற்பயணம் செய்வதற்கு முன்வந்தனர். அடுத்து ஆட்சிக்கு வந்த ஹென்றி மன்னனும் தொடர்ந்தும் கடற்பயணங்களுக்கு மக்களை ஆர்வமூட்டினான்.

### இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சி (1505-1658)

நீண்டகாலத்திற்கு முன்பிருந்தே ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையே வர்த்தகத் தொடர்பிற்கான மூன்று முக்கிய பாதைகள் இருந்தன.

- கொன்ஸ்தாந்திநோபிள் நகரிலிருந்து பாரசீகம், மத்திய ஆசியா வழியாக சீனா வரையிலான பட்டுப் பாதை.
- கொன்ஸ்தாந்திநோபிளிலிருந்து மத் தியதரைக் கடல் வழியாக எகிப்து, செங்கடல் ஊடாக இந்து சமுத்திரத்திற்கு வந்த பாதை.
- கொன்ஸ்தாந்திநோபிளிலிருந்து பக்தாத், பாரசீகக்குடா வழியாக இந்தியாவின் மேற்குக் கரைக்கு வந்த பாதை.

இந்த பாதைகளினூடாக வர்த்தகத் தொடர்பு இடம்பெற்றபோது, தரை மார்க்கமாகப் பொருட்களை எடுத்துச்செல்லும் பொருட்டு மிருகங்கள் பயன்படுத்தப்பட்டன. கடல் வழியாகப் பொருட்களை எடுத்துச் செல்லும்போது கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. முஸ்லிம்கள் ஆசியாவில் வாசனைப் பொருட்களைச் சேகரித்து ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்று விற்றதன் மூலம் அதிக இலாபத்தைப் பெற்றனர்.

மேற்கூறப்பட்ட பாதைகள் மூன்றும் கொன்ஸ்தாந்திநோபிளுடன் தொடர்புடையதாக இருந்தன. ஐரோப்பிய கிறிஸ்தவர்களின் கையிலிருந்த இந்நகர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த துருக்கியரால் 1453 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்டமையானது ஆசிய, ஐரோப்பிய மரபு ரீதியான வர்த்தகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

போர்த்துக்கேயர், தமது தாய் நாடான போர்த்துக்கல்லிலிருந்து இலங்கைக்கு வந்தனர். போர்த்துக்கல் தென்மேற்கு ஐரோப்பாவில் ஐபீரியன் தீபகற்பத்தில் அமைந்துள்ள நாடாகும். அது அத்திலாந்திக் சமுத்திரத்தை நோக்கி அமைந்துள்ளது. இதனால் கடல் வழியாகவே அவர்கள் வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டனர்.

எனவே அவர்கள் கடல் செயற்பாடுகளில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். 15 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கலின் அரசனாக இருந்த நான்காம் ஹென்றி அல்லது கடலோடி ஹென்றி என்பவன் நாடுகாண் பயணத்தில் அதிக ஆர்வம் செலுத்தினான்.

போர்த்துக்கல்லில் கப்பல் கட்டும் தொழில் தொடர்பாகப் பாடசாலை ஒன்றை நடத்தியதுடன் அங்கு தேசப்படம், நட்சத்திரம் தொடர்பான பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இதனால் ஆசியாவுக்குச் செல்வதற்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடிப்பதில் ஏனைய ஐரோப்பிய நாடுகளை விடப் போர்த்துக்கல் முன்னணியில் இருந்தது. போர்த்துக்கேயனான வஸ்கொடகாமா ஆபிரிக்காவைச் சுற்றி 1498 ஆம் ஆண்டு இந்தியாவின் கள்ளிக்கோட்டையை அடைந்ததும் ஆசியாவில் ஐரோப்பியரின் ஆதிக்கம் செயற்படத் தொடங்கியது. போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வருகை தந்த பின்னர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்ஸியர் போன்ற ஏனைய ஐரோப்பியர்களும் ஆசியாவுக்கு வந்து பல்வேறு இடங்களில் தமது ஆதிக்கத்தைப் பரப்பினர்.

இவ்வாறு 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதற்கொண்டு 450 ஆண்டுகள் வரை ஆசியாவில் ஐரோப்பியரின் ஆதிக்கம் நிலைபெற்றது.

ஐரோப்பியர் பல நோக்கங்களுடனேயே ஆசியாவுக்கு வந்தனர். பொருளாதார ரீதியாக இலாபம் பெறல், கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புதல், உலக ரீதியாகப் புகழ் பெறல் என்பன அவற்றில் முக்கியமானவையாகும். 16 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்களுக்கு அமைய ஐரோப்பியரின் ஆசிய வருகையின் நோக்கத்திலும் மாற்றங்கள் ஏற்படலாயின.

### போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வந்ததன் அடிப்படை நோக்கம்

போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வந்ததன் அடிப்படை நோக்கம் பொருளாதார ரீதியாக இலாபம் பெறுதல், கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல் என்பனவாகும். போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வரும்போது ஆசியாவில் வர்த்தக ஏகபோக உரிமை முஸ்லிம்களின் கையில் இருந்ததால் அவர்களைத் தோற்கடித்து வர்த்தக ஏகபோக உரிமையைத் தமதாக்கிக் கொள்வது போர்த்துக்கேயரின் குறிக்கோளாக இருந்தது. இதன் மூலம் நல்ல இலாபத்தைப் பெறலாம் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

கிறிஸ்தவர்களையும் வாசனைப் பொருட்களையும் தேடி இங்கு வந்துள்ளோம் எனக் கள்ளிக்கோட்டையை வந்தடைந்ததும் வாஸ்கொடகாமா கூறியதிலிருந்து இது தெளிவாகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட டெங்கு...

துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று முதல் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது. இதன்போது மாவட்டத்தி லுள்ள அனைத்து பொது சுகாதார பரிசோதகர்களும் இந்த வேலை திட் டத்தில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள்.

குறிப்பாக திருநெல்வேலி, கொக்கு வில், யாழ் நகரை அண்டிய பகுதி களில் அதிகளவானோர் கடந்த இரண் டரை மாதங்களுக்குள் தொற்றுக்குள் ளாகி இருக்கின்றார்கள்.

ஆகவே இது ஒரு முக்கியமான பிரச்சினையாகக் காணப்படுகின்றது, கடந்த டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 800 பேருக்கு மேற்பட்டவர் கள் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கத்திற்குள்ளாகி இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தினசரி நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் படுகின்றார்கள். இது ஒரு முக்கிய பிரச்சினை.

இன்று காலை 8.30 மணி முதல் கொக்குவில் கிழக்குப் பகுதியில் 20 குழுக்களாக இந்தப் பணியை ஆரம் பிக்க இருக்கின்றோம் இந்த வேலை திட்டத்தில் அந்தந்த கிராமங்களில் இருக்கின்ற பொதுமக்கள் சார் அமைப் புகள் இணைந்து கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். (ம-7)

## சுற்றுலா...

இலட்சத்தை தாண்டியுள்ளது.

அதன்படி, நேற்றைய தினம் வரை ஒரு இலட்சத்து ஆயிரத்து 362 சுற்று லாப் பயணிகள் இலங்கைக்கு வந் துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதி காரசபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் மட்டும் 2 ஆயிரத்து 545 சுற்றுலா பய ணிகள் வந்திருந்தனர். (ம-7)

## ஒரு நாள்...

அட்டை வழங்கப்படும் என போக்கு வரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கருத் துத் தெரிவிக்கும்போதே போக்கு வரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் 25 மாவட்ட அலுவலகங் களும் இந்த வருட இறுதிக்குள் வெர ஹெர தலைமை அலுவலகத்தின் நிலைக்கு மேம்படுத்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தினார்.

எமது நாட்டில் சுமார் 8.9 மில்லியன் வாகனங்கள் பாவனையில் உள்ளன. அதேபோன்று சுமார் 85 இலட்சம் பேர் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள னர். சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அனைத்து மாவட்ட அலு வலகங்களையும் இந்த ஆண்டு இறு திக்குள் வெரஹெர தலைமை அலு வலகத்தின் தரத்திற்கு மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், ஏப்ரல்மாதத்திற்குள் விமான நிலையத்தில் வெளிநாட்டவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தற்போது வழங்கப்பட் டுள்ள தற்காலிக சாரதி அனுமதிப்பத் திரத்திற்குப் பதிலாக எதிர்வரும் ஒக் ரோபர் மாதத்திற்குள் ஒருநாள் சேவை யின் ஊடாக வழமைபோன்று அனை வருக்கும் சாரதி அனுமதிப்பத்திர அட்டை வழங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். (ம-7)

## 14 தமிழ்...

வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்திற்கு நேற்று விஜயம் செய்த நீதி அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷ விசேட பூஜை வழி பாட்டில் கலந்து கொண்டார்.

அதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரி விக்கையில்,

கந்தக்காடு முகாமில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அங்கு புனர்வாழ்வு பெறுபவர்கள், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் மற்றும் யுக்திய நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட வர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் கள். மூன்று பிரிவுகளாக கந்தக்காடு முகாம் இயங்கி வருகின்றது. அங்கு இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அதன் நிர்வாக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை இடமாற்றம் செய்யும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள் ளது.

போதைப்பொருள் பாவனை அதி கரித்து வருகின்றது. அது இளம் சமு தாயத்தையும் பாதித்துள்ளது. யுக்திய நடவடிக்கை மூலம் போதைப்பொருள் விற்பனை மற்றும் போதைப்பொருள் மாபியாக்களை கட்டுப்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யுக்திய நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட வர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

அத்துடன், அரசியல் கைதிகள் விடயத்தில் 5 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன் னும் 14 அரசியல் கைதிகளே உள்ள னர். அவர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகள் நீதிமன்றத்தில் இடம் பெற்று வருகின்றன என்றார். (ம-7,250)

## மன்னாரில்...

தாசன் (வயது- 67) என்பவரே உயிரி ழந்தவராவார்.

பால் மற்றும் அரிசி வியாபாரம் செய்து வரும் குறி த்த நபர் கடந்த 15 ஆம் திகதி நானாட்டானி லிருந்து மன்னர் நோக்கி துவிச் சக்கரவண்டியில் சென்று கொண்டி ருந்தபோது பின் னால் அதிவேக மாக வந்த மோட் டார் சைக்கிள் அவரை மோதித் தள்ளியுள்ளது.

இதில் படு காயங்களுக்கு உள்ளானவர் மன்னார் வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலை க்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று புதன் கிழமை காலை 5.30 மணி யளவில் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத் தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவா யம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## நாட்...

யில் தனிப்பட்ட அல்லது அரசி யல் தொடர்புகள் காரணமாக தான் பொதுமன்னிப்பு வழங்கியதாக தெரிவிக்கப்படு வதை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

எனக்கு வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கைகளில், துமிந்த சில்வாவை சிறையில் வைத்திருப்பது அவரது உடல் நலத்திற்கு பாதிப்பை ஏற்படுத் தும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

வேறு பல காரணங்களை முன் வைத்து அவருக்கு பொதுமன்னிப்பை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை எனக்கு விடுக்கப்பட்டமை நினைவில் உள்ளது என கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வாவிற்கு நான் பொது மன்னிப்பை வழங்க வேண்டியது அவசி யம் என தெரிவிக்கும் வேறு பல விடயங் களும் ஆவணங்களும் காணப்பட்டன.

நான் தேசிய நலனை கருத்திற் கொண்டே பொதுமன்னிப்பை வழங்கி னேன் எனவும் நீதிமன்றத்தில் சமர்ப்பித் துள்ள சத்தியக் கடதாசியில் தெரிவித் துள்ளார். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.17
சீட்டிழுப்பு இலக்கம் 0188
Q 6 5 3 2 1 0 Q

தன நிதானய
திகதி - 2024.01.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1392
Z 07 68 74 75 Z
51971

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3604
சீட்டிழுப்பு திகதி 17.01.2024
F 37 67 68 73
F
75353

ஹதஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.17
சீட்டிழுப்பு இலக்கம் 0671
ரிஷபம் 46 54 56 57 ரிஷபம்
07844 29

மஹஜன சம்பத
திகதி 2024/01/17
சீட்டிழுப்பு இலக்கம் 5362
P 7 5 0 6 8 0

மெகா பவர்
திகதி 17/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1710
B 03 01 03 09 28
03895

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
17.01.2024 வெற்றி வாரம் 070 வர்ணம் பசுமை
G 5 6 2 3 2 5
62743
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,610,803.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2336 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.01.17 தினம் புதன்கிழமை
23 31 46 50 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,523,635.20
36014

சனிதா
திகதி 2024.01.17 வெற்றி வாரம் 4497
14 40 45 63 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,350,461.60
58916

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4048 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.01.17 தினம் புதன்கிழமை
33 51 55 58 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000.00
760943

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 10 21 37 44 70
1512
17.01.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 493,817,606.20

ஜயோதா Jayoda
திகதி 2024.01.17 வெற்றி வாரம் 1992 வர்ணம் மஞ்சள்
46 47 50 60 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,521,874.00
28589

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2162
சீட்டிழுப்பு திகதி: 2024.01.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,306,276.80
17 49 63 74 X
739604


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**IELTS - New Batch ஆரம்பம்**

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (18663)

**ENGLISH**
**Gr. 6 - O/L**
•Text book •Grammar
•Monthly, Model Exams
P.Tharmakumaran(P.MATHAN)
B.A(Eng.Lit), Dip.in.Eng.,SLTES
**NEWTON**
NALLUR 077 792 3653

**CANADA**
**VISITOR VISA**
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-8157)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

**பணிப்பெண் தேவை**
வீட்டில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய 18 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (C-8158)
077 315 4070

**காணி விற்பனைக்கு**
**யாழ்ப்பாணம் நாவற்குழி A9 வீதியுடன் 10 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**
- நிலப்பரப்பு
- நல்ல சூழல் நன்னீரூற்று
- நாவற்குழிச் சந்தியிலிருந்து 3/4 Km
- வடமாகாண சபை 300m
- கைதடிச் சந்தி 1 Km மெயின்றோட்டுடன் உள்ளது.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(18664)
**071 173 3911**
**076 853 5022**


# மரண அறிவித்தல்

## கிருஸ்ணபிள்ளை நாகரத்தினம்மா



தோற்றம் :09.09.1939 மறைவு : 03.01.2024

அரியாலையைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை நாகரத்தினம்மா அவர்கள் 03.01.2024 புதன் கிழமை அன்று இங்கிலாந்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லாச்சி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை(ஓய்வுபெற்ற சாரதி - இலங்கை போக்குவரத்து சபை) அவர்களின் அன்பு மனைவியும் அப்பாத்துரை(லண்டன்), ஜெயராசா (லண்டன்), தர்மசகுந்தலாதேவி (லண்டன்), இராஜராஜேஸ்வரி(பிரான்ஸ்), இராஜமோகன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசையா, நல்லதம்பி, இரத்தினசிங்கம், முத்துமாலை மற்றும் செல்வராசா, மகாலிங்கம், பாக்கியநாதன், பூலோகசிங்கம், ஸ்டெல்லா(லண்டன்), சின்னராசா(லண்டன்), விஜயகாந்தன்(பிரான்ஸ்), ரவிச்சந்திரிக்கா(லண்டன்), சுதாஜினி(லண்டன்), ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயகுலரதி (லண்டன்), கிருஸ்ணமனோரதி(லண்டன்), கிருஸ்ணஜெயஸ்ரீ (லண்டன்), கிருஸ்ணவிஜயஸ்ரீ (லண்டன்), கிருஸ்ணபிரேமரதி(பிரான்ஸ்), கிருஸ்ணசுபாரதி(லண்டன்), கிருஸ்ணராஜஸ்ரீ (லண்டன்), காலஞ்சென்ற கிருஸ்ணஜமுனாரதி மற்றும் கிருஸ்ணபுஸ்பஸ்ரீ (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயராஜா(லண்டன்), மகேந்திரராசா(லண்டன்), ஸ்ரீபாஸ்கரன் (பிரான்ஸ்), கோபாலகிருஸ்ணன் (லண்டன்), விஜயநிர்மலா (லண்டன்), சுதாமதி (லண்டன்), ராதிகா(லண்டன்), நித்தியகுமாரி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.01.2024 இன்று வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் EDEN MINERS HALL, COUNTRY DURHM, UK இல் பார்வைக்கு வைக்கப்பட்டு நண்பகல் 2.30 மணியளவில் MOUNTSETT CREMATORIUM CHAPEL, ENGLAND இல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அராலி தெற்கு, காளிகோவிலடி.

ரதி - மகள் : 0044 7727055401
ஸ்ரீ - மகன் : 0044 7480235795
கிருஸ்ணா - மகன் : 0044 7779414950
மனோ - மகள் : 0044 7804467941

தகவல் :
நாகலிங்கம் குடும்பம்
(ரவி -077 555 8485)
(18662)



கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி திரு.ச.சந்திரகுமார் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் "இயற்கையுடன் ஒன்றிணைவோம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் STS கண் வைத்தியசாலையும் நீர்வேலி Green Layer அமைப்பும் இணைந்து 5,000 மரக்கன்றுகளை நடும் செயற்திட்டமானது பொங்கல் தினமான 15.01.2024 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## ஜனாதிபதியின்...

நேற்று முல்லைத்தீவு மாங்குளம் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணை ஒன்றிற்காக வருகை தந்திருந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் சரித்திரத்திலே முதல் தடவையாக ஜனாதிபதி ஒருவருடைய மன்னிப்பு செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கின்றது. இது வரவேற்க வேண்டிய ஒரு விடயம் வேறு சில வழக்குகளும் நிலுவையிலே இருக்கின்றன. விஷேடமாக மிருசுவில் படுகொலையாளி சுனில்ரட்நாயக்கவிற்கு கொடுத்த மன்னிப்பையும் நாங்கள் சவாலுக்கு உட்படுத்தி இருக்கின்றோம். அந்த தீர்ப்பு இன்னும் வெளிவரவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,299)

## என்னைக்...

யதாக பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கேள்வி பதிலிலேயே இவ்விடயத்தை தெரிவித்தார்.

அந்த கேள்வி பதிலில்,என்னுடைய சில கேள்வி பதில்களை வாசித்துவிட்டு ஒரு படித்த சிங்கள இளைஞர் என்னுடன் தொலைபேசியில் பேசினார். பேச்சு கிட்டதட்ட பின்வருமாறு அமைந்தது.

இளைஞர் - "சேர்! உங்களைக் கொல்ல வேண்டும் என்ற கொலை வெறியில் இருந்தேன். என்றாலும் நீங்கள் குறிப்பிட்ட பேராசிரியர் ஆரியரட்ணவின் சிங்கள நூலான "தெமள பௌத்தயா"வை (தமிழ் பௌத்தர்கள்) வாசித்த பின்னர்தான் உங்கள் கூற்றுக்களின் உண்மையைப் புரிந்து கொண்டேன். உங்களை வந்து சந்திக்க விரும்புகின்றேன்."

நான் - "தாராளமாக வாருங்கள்! கொல்ல வேண்டும் என்றாலும் வாருங்கள்! எனக்கு இப்பொழுது 83 வயது (அப்போதைய வயது). தொடர்ந்து இந்த உலகத்தில் இருக்க வேண்டும் என்ற ஆசை எதுவும் எனக்கில்லை."

இளைஞர் : இல்லை சேர்! நான் வெறும் பேச்சுக்கே அவ்வாறு சொன்னேன்."

இன்றுவரை அவர் என்னை வந்து சந்திக்கவில்லை. ஆனால் அவர் தமது மனமாற்றத்தை வெளியிட்டமை தான் இந்தக் கேள்வி பதிலுக்கு முக்கியமானது.

சிங்கள மக்களுக்கு எம்மைப் பற்றிய போதிய அறிவு இல்லாமையே தமிழ் - சிங்கள உறவானது இன்றும் மேம்படாமல் இருப்பதற்குக் காரணம் என்றுள்ளது. (ம-7)


**உடனடி வேலை வாய்ப்பு**
**நிர்வாக உத்தியோகத்தர்**
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-8157)
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18603)
076 825 7716 (ஆகாஸ்)

**சிவனடியார்களே**
அருள்மிகு ஆதிபராசக்தி உடனுறை ஆதிசிவன் திருக்கோவில் தொல்புரம்(பூதராசி அம்மன் கோயில் பின்புறம்) 19.01.2024 வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணி வரை விசேட பூசை நடைபெறவுள்ளது.
அனைவரும் வருக
சிவஸ்ரீ குகன் குருக்கள்
077 614 0849, 074 369 2974
(18645)

**நீங்கள் கடுமையாக இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?**
**இன்றே பாவியுங்கள்**
சித்தாரா துளசி அசமோதகம் பாணி
ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்தஅற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும்சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு,அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.
யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY. (C-8154)
சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சந்திரச்சந்திக்கு அண்மையில்)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org